விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 204 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 26 புதன்கிழமை (10.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829





# சர்வதேச கண்காணிப்பு தொடர்ந்து அவசியம்

## ஐ.நா பிரதிநிதியிடம் தமிழ்த் தரப்பு வலியுறுத்து

(முல்லைத்தீவு)

சர்வதேச அமைப்புக்களின் தொடர் கண்காணிப்பு அவசியம் என கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுக்கு விஜயம் செய்த ஐ.நா பிரதிநிதியிடம் தமிழ்த் தரப்பு வலியுறுத்தியுள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)



## சாவகச்சேரி வைத்தியசாலையின்

புதிய பதில் வைத்திய அத்தியட்சகராக கோபாலமூர்த்தி ரஜீவ் நேற்று நியமனம்



▷02

## அல்வாயில் வீதி விபத்து

### ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

அல்வாயில் இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்தவர் உயிரிழந்துள்ளார்.

இதில் அல்வாய் கிழக்கைச் சேர்ந்த சுப்ரமணியம் சிவபாதசுந்தரம் (வயது-80) என்பவரே உயிரிந்தவராவார்.

கடந்த ஐந்தாம் ▷15

## விசுவமடு வள்ளுவர்புரத்தில்

## தும்புத் தொழிற்சாலையில் தீ விபத்து ; பல இலட்சம் நஷ்டம்

(புதுக்குடியிருப்பு)

விசுவமடு வள்ளுவர்புரத்தில் தும்புத் தொழிற்சாலையில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த விபத்தால் பத்து இலட்சத்துக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விசுவமடு வள்ளுவர்புரம் பகுதியிலுள்ள பெண் தொழில் முயற்சியாளர் ஒருவரின் தும்புத் தொழிற்சாலையில் நேற்று மதியம் தீ ▷02

## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில்

## பொறுப்பற்று செயற்பட்டவர்கள் உடனடியாகத் தண்டிக்கப்பட வேண்டும்

### அமைச்சரவையில் அமைச்சர் டக்ளஸ்



(கொழும்பு)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வினைத்திறனுடன் இயங்குவதை விரும்பாத சக்திகளே கடந்த சில தினங்களாக அங்கு நிலவிய அசாதாரண சூழலுக்கும் மக்கள் போராட்டத் ▷15

## போதை மாத்திரை விற்பனை பகிரங்க விசாரணை வேண்டும்

### பாராளுமன்றில் சிறீதரன் எம்.பி வலியுறுத்து



(கொழும்பு)

போதை மாத்திரை விற்பனை செய்ததாக எழுந்துள்ள குற்றச்சாட்டின் உண்மைத் தன்மைகளை உடனடியாக விசாரணை நடத்தி கண்டறிய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.

சாவகச்சேரி வைத்தியசாலையின் முன்னாள் பதில் வைத்திய அத்தியட் ▷02

## ஜூலை மாத இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு

### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

ஜூலை மாத இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியாகும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க,

ஜூலை மாத இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் குறித்த அறிவிப்பு வெளியானால் செப்ரெம்பர் ▷15

## ஹயஸ் வாகன விபத்தால் மாடு கடத்தல் முறியடிப்பு

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியாவில் வாடகைக்கு அமர்த்திய ஹயஸ் ரக வாகனத்தில் மாட்டை கடத்தியவர் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, பாவற்குளம் பகுதியைச் சேர்ந்த சிலர் ஆச்சிபுரம் பகுதியில் ஹயஸ் ரக வாகனம் ஒன்றினை ▷15

## முல்லையில் வாகன விபத்து

### குடும்பஸ்தர் உயிரிழப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - துணுக்காய் பகுதியில் வாகன விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வவுனிக்குளத்தைச் சேர்ந்த சின்னத்துரை வாஸ்கரன் (வயது-48) ▷15

## ஜூலை 8, 9ஆம் திகதிகளில்

## கடமைக்கு சமுகமளித்த அரச அதிகாரிகளுக்கு

### விசேட சம்பள உயர்வு

(கொழும்பு)


ஜூலை 08 மற்றும் 09ஆம் திகதிகளில் கடமைக்கு சமுகமளித்த நிறைவேற்றுத்தரம் அல்லாத அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் விசேட சம்பள உயர்வை வழங்குவதற்கும் எதிர்கால பதவி உயர்வுகளுக்கு பயன்படுத்தும் வகையில் ▷02

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலய விமானக் குண்டுத் தாக்குதல்

## 29ம் ஆண்டு நினைவு தினம்



யாழ்ப்பாணம் நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமான தாக்குதலின் 29ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று மாலை சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் நினைவுகூரப்பட்டது.

சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் நேற்று மாலை பங்குத்தந்தை தலைமையில் வழிபாடுகள் நடைபெற்றது. அதனை தொடர்ந்து உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் மலர்தூவி சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்கள்.

கடந்த 1995 ஆம்ஆண்டுஜூலை மாதம் 09ஆம் திகதியன்று நவாலிசென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்திலும் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக்கள் மீது விமானப் படையினரின் மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை வீசியதில் 147 பேர் படுகொலை செய்யப்பட்டனர். (ம-7,33)

# நாணயத் தாளை காலால் மிதித்தவர்

## பிணையில் விடுதலை

இலங்கை நாணயத்தாளை காலால் மிதித்து அவமானப்படுத்திய குற்றச்சாட்டில் தியாகி அறக்கொடை நிறுவுனர் நீதிமன்றில் முன்னிலையாகிய நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அவரது சோர்வே நாணயத்தாள்களை மிதித்தமைக்கு காரணம் என அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி முன்வைத்த காரணத்தை ஏற்க மறுத்த யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று, யாழ்ப்பாணம் மாவட்ட குற்றப்பிரிவு முன்வைத்த குற்றச்சாட்டை ஏற்றதோடு இரண்டு ஆள்பிணையில் தியாகேந்திரனை விடுவித்து உத்தரவிட்டது. (ம-7)

# யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் 2022ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரத்தில் பாடசாலைப் பரீட்சார்த்தியாக தோற்றியவர்களில் பல்கலைக்கழக நுழைவு பெற்ற மாணவிகள் தங்கள் விபரங்களை (பெயர், பாடநெறி, பல்கலைக்கழகம்) வகுப்பாசிரியர் அல்லது பகுதித் தலைவரைத் தொடர்பு கொண்டு எதிர்வரும் 30.07.2024ஆம் திகதிக்கு முன்னர் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கல்லூரி அதிபர் செல்வி எஸ்.கந்தசாமி கேட்டுள்ளார். (நி-6)

## சர்வதேச...

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் மூன்றாங்கட்ட அகழ்வாய்வின், ஐந்தாம்நாள் அகழ்வாய்வுப்பணிகள் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந்நிலையில் குறித்த கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் அகழ்வாய்வுகள் இடம்பெறும் இடத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை அலுவலகத்தின், மனித உரிமைக்கான அலுவலர் லுடியானா ஷெல்ரின் அகிலன் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்ததுடன், குறித்த அகழ்வாய்வு நிலைமைகள் தொடர்பில் பேராசிரியர் ராஜ்சோமதேவ, சட்டத்தரணி கே.எஸ். நிரஞ்சன் ஆகியோரிடம் கேட்டறிந்து கொண்டார்.

இந்நிலையில் இவ்வாறான சர்வதேச அமைப்புப் பிரதிநிதிகளின் கண் காணிப்பு விஜயத்தால் தமக்கு இந்த அகழ்வாய்வின்மீது நம்பிக்கை ஏற்பட்டிருப்பதாகவும், இந்த அகழ்வாய்வின் மீது தொடர்ந்தும் சர்வதேச கண்காணிப்பு அவசியமெனவும் தமிழ்த் தரப்புக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

கொக்குத்தொடுவாய் மனிதப்புதை குழியின் மூன்றாம்கட்ட, ஐந்தாம்நாள் அகழ்வாய்வுப்பணிகள் தொல்லியல் துறைப் பேராசிரியர்ராஜ்சோமதேவதலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டது.

அத்தோடு ஐ.நாவின் இலங்கை அலுவலக மனிதஉரிமை அலுவலர் லுடியானா ஷெல்ரின் அகிலன், முல்லைத்தீவு மாவட்ட சட்டவைத்திய அதிகாரி கனக சபாபதி வாசுதேவா, சட்டத்தரணிகே.எஸ். நிரஞ்சன், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கொக்கிளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கொக்குத்தொடுவாய் கிராம அலுவலர் உள்ளிட்ட தரப்பினரின் கண்காணிப்புகளுக்கு மத்தியிலும் இந்த அகழ்வாய்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன

இந்த ஐந்தாம் நாள் அகழ்வாய்வுப் பணிகளில் முல்லைத்தீவு - கொக்கிளாய் பிரதான வீதியின் ஐந்தாவது மண்படை அகழப்பட்டு அகழ்வாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன

மேலும் குறித்த ஐந்தாம்நாள் அகழ்வாய்வுகளில் சில மர்மப்பொருட்கள் பகுதியளவில் வெளிப்பட்டுத் தென்படுவதாக இந்த அகழ்வாய்வு கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள சட்டத்தரணி எஸ்.நிரஞ்சன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார்.


ஆறாம்நாள் அகழ்வாய்வுப் பணிகளின் பின்னரே குறித்த மர்மப்பொருட்கள் என்ன என்பதை முழுமையாக இனங்காணமுடியும் எனவும் தெரிவித்தார்.

அதேவேளை இந்த மனிதப்புதைகுழி இனங்காணப்பட்டதிலிருந்து, இந்த மனிதப்புதைகுழி அகழ்வாய்வு விவகாரத்திற்கு சர்வதேச கண்காணிப்பு அவசியம் என்பதை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், தமிழ் மக்கள் பிரதிநிதிகள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

ஐ.நா பிரதிநிதியின் விஜயம் குறித்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் முல்லைத்தீவு மாவட்டத் தலைவி மரியசுரேஸ் ஈஸ்வரி, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோர் கருத்துத் தெரிவிக்கையில், இவ்வாறான சர்வதேச பிரதிநிதிகள் கண்காணிப்பது இந்த அகழ்வாய்வின்மீது தமக்கு நம்பிக்கை ஏற்படுவதாக அமைவதாகவும், தொடர்ந்தும் இந்த மனிதப் புதைகுழி அகழ்வாய்வில் சர்வதேச கண்காணிப்பு தொடர்ந்தும் இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,299)

# மரண அறிவித்தல்

பூலோகம்
17 - 06 - 1948



வைகுண்டம்
09 - 07 - 2024

## பிரம்மஸ்ரீ கணபதிசாமிக்குரு சுதர்சனக்குரு

பிரதமகுரு (ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்– வடமராட்சி)

இந்திரன் அம்மன் கோவிலடி வல்லிபுராலயம் துன்னாலையைப் பிறப்பிடமாகவும் சிவன் கோவிலடி ஆவரங்காலை வதிவிடமாகவும் கொண்ட கணபதி சாமிக்குரு சுதர்சனக்குரு அவர்கள் நேற்று (09.07.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ச.கணபதிசாமிக்குரு (பிரதமகுரு - ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் - வடமராட்சி) - உருக்குமணி அம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான ஆவரங்காலைச் சேர்ந்த சொக்கநாதக்குருக்கள் - மனோன்மணி அம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்றவரான இ.யோகேஸ்வரி அம்மா, இராமச்சந்திரக்குரு (அவுஸ்ரேலியா), காலஞ்சென்றவரான புருசோத்தமக்குரு ஆகியோரின் அன்புச் சகோதரனும் தனலட்சுமி அம்மா அவர்களின் பாசமிகு கணவரும் கணபதீஸ்வரக்குரு (கண்ணன் குரு), ஜனார்த்தனசர்மா (ஜனா ஐயா), கிரிதரக்குரு (கிரி ஐயா) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயலட்சுமிஅம்மா, காயத்திரி அம்மா, ரமாதேவி அம்மா ஆகியோரின் அன்பு மாமனும் ஜகராஜ் சர்மா, ஜீவராஜ் சர்மா, கிரிஷிகேச சர்மா, ரிஷி வர்ம சர்மா, துவாதச சர்மா, துவிதசன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (10.07.2024) இன்று புதன்கிழமை காலை 6.00 மணி முதல் சமயக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காலை 09.00 மணியளவில் கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்

சிவன் கோவிலடி,
ஆவரங்கால். (c-0766)

## கடமைக்கு...

விசேட பாராட்டுச் சான்றிதழை வழங்குவதற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது தொடர்பாக அனைத்து அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத்தலைவர்கள் மற்றும் மாகாண பிரதான செயலாளர்களுக்கு அறிவிக்குமாறும் அது தொடர்பிலான சுற்றுநிருபம் வெளியிட நடவடிக்கை எடுக்குமாறும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற நியாயமற்ற பணிப்புறக்கணிப்புகளில் ஈடுபடாது, பணிக்கு சமுகமளித்த நிறைவேற்றுத்தரம் அல்லாத அரச உத்தியோகத்தர்களை பாராட்டுவது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

## போதை மாத்...

சகா இராமநாதன் அர்ச்சுனா பகிரங்கப்படுத்திய விடயங்கள் தொடர்பில் பாராளுமன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

“சாவகச்சேரி விவகாரம் பூதாகரமாக வெடிப்பதற்கு யார் காரணம்? நீண்டகாலமாக அந்த மக்கள் எதிர்பார்க்கும் விடயம் பூர்த்தி செய்யப்படாமையே.

இதற்கு வடக்கு மாகாண சுகாதார பணிப்பாளர், மற்றும் யாழ். மாவட்ட சுகாதார பணிப்பாளர் ஆகியோர் இணைந்து தீர்வை கொண்டு வரவேண்டும்.

இவ்வளவு காலமாக செயற்படுத்தப்படாத அவசர சிகிச்சைப்பிரிவு உடனடியாக செயற்படுத்தப்பட வேண்டும்.

அங்கு கூடியவர்கள் அர்ச்சுனா வைத்தியருக்காக மாத்திரம் கூடிய மக்கள் அல்ல. அவர்களின் நீண்டநாள் கோரிக்கைகள், எதிர்பார்ப்புக்கள் செயற்படுத்தாமைக்கான விளைவாகும்” என சிறீதரன் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## சாவகச்சேரி...

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் புதிய பதில் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் கோபாலமூர்த்தி ரஜீவ் நேற்று செவ்வாய்க்கிழமை காலை தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றார்.

(விரிவான செய்தி 06ஆம் பக்கத்தில்)


## தும்புத்...

விபத்து ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச சபையின் தீயணைப்பு வாகனம் வரவழைக்கப்பட்டு தீ கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டாலும் பத்து இலட்சத்திற்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக குறித்த தும்புத்தொழிற்சாலையின் உரிமையாளர் தெரிவித்தார். (ம-7,316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் அதிகாரமின்றி 13 ஆவது திருத்தமா?



## ஒரு போதும் ஏற்கோம் என்கிறார் சிறீதரன் எம்.பி

**(திருமலை)**

**பொலிஸ் அதிகாரமின்றி 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது ஒருபோதும் தமிழர் விரும்பும் அரசியல் தீர்வாக அமையாது எனவும் சுட்டிக்காட்டியுள்ள இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் இவ்வாறான கருத்துக்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் மத்தியில் அவருக்குப் பாரிய பின்னடைவையே தேடித்தரும் எனத் தெரிவித்துள்ளார்.**

மறைந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பெருந் தலைவர் இரா.சம்பந்தன் பிரிக்கப்படாத ஒருமித்த நாட்டுக்குள் அரசியல் தீர்வைக் கோரியதாகவும் தற்போது அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை பொலிஸ் அதிகாரமின்றி மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட வேறு பல அதிகாரங்களுடன் நடைமுறைப்படுத்துவது குறித்து பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி வருவதாகவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரா.சம்பந்தனின் இறுதிக்கிரியை நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டிருந்தார்.

இருப்பினும் ஜனாதிபதியின் இக்கருத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்த இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை பொலிஸ் அதிகாரமின்றி நடைமுறைப்படுத்துவது ஓரளவுக்கேனும் ஏற்றுக்கொள்ளத்தக்க அர்த்தமுள்ள அரசியல் தீர்வாக அமையாது எனச் சுட்டிக்காட்டினார்.

பிளவுபடாத ஒருமித்த இலங்கைக்குள் அரசியல் தீர்வினை சம்பந்தன் கோரியதாக ஜனாதிபதி கூறுகின்றார்.

இருப்பினும் அவர் பிளவுபடாத இலங்கைக்குள் தமிழர்களைத் தேசிய இனமாக அங்கீகரிக் கக்கூடிய, சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டி முறையிலான அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வையே கோரினார்.

மாறாக அவர் ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பகிர்வைக் கோரவில்லை. அவ்வாறிருக்கையில் பொலிஸ் அதிகாரங்களின்றி 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்துக் கலந்துரையாடி வருவதாக ஜனாதிபதி கூறுகின்றார். அது ஓரளவுக்கேனும் ஏற்றுக் கொள்ளத்தக்க அரசியல் தீர்வாக ஒருபோதும் அமையாது.

எனவே உரையில் ஜனாதிபதி வெளியிட்ட கருத்தை நாங்கள் முற்றாக நிராகரிக்கின்றோம் எனவும் சிறீதரன் தெரிவித்தார்.

அதுமாத்திரமன்றி ஏற்கனவே மாகாணங்களுக்கான கல்வி மற்றும் சுகாதாரத்துறை சார்ந்த அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகவும் எனவே மேலும் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்படுவதை கிஞ்சித்தும் ஏற்கமுடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் தமிழ்மக்களை தேசிய இனமாக அங்கீகரித்து சுயநிர்ணய உரிமையை உறுதி செய்யக்கூடிய விதத்தில், சமஷ்டி அடிப்படையிலான அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை வழங்குவது குறித்து இதயசுத்தியுடன் பேசுவதற்கு ஜனாதிபதி எம்மை அழைத்தால், அப்பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதற்கு தமிழரசுக்கட்சி தயாராக இருக்கின்றது எனவும் சிறீதரன் தெரிவித்தார். (நி-6)

## பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்றார் குகதாசன்

(கொழும்பு)

இரா.சம்பந்தன் மறைவை அடுத்து திருகோணமலை மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட கதிரவேலு சண்முகம் குகதாசன் பாராளுமன்ற உறுப் பினராக பதவியேற்றார்.

கடந்த 2 ஆம் திகதி திருகோணமலை மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினராக கதிரவேலு சண்முகம் குகதாசன் நியமிக்கப்பட்டிருந்தார்.

பாராளுமன்ற அமர்வு நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் அவர் பதவியேற்றார்.

திருகோணமலை, திரியாயைப் பிறப்பிடமாகக் கொண்ட குகதாசன் நீண்ட காலம் கனடாவில் வசித்து வந்தார். 2020 முதல் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவராகப் பணியாற்றுகிறார். 2020 இல் பாராளுமன்றத் தேர்தலில் குகதாசன் இலங்கைக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு 16 770 வாக்குகளைப் பெற்றார்.

இத்தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் ஒரு உறுப்பினரையே தமிழரசுக் கட்சி பெற்றது. இரா.சம்பந்தனுக்கு அடுத்து அதிக வாக்குகளை பெற்ற அடிப்படையில் இவர் சம்பந்தனின் மறைவை அடுத்து பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். (நி-6)

## 30 வீதத்தால் குறைக்கப்படும் மின்கட்டணம்-காஞ்சன



(கொழும்பு)

மின்சார கட்டணம் 30 வீதத்தால் குறைக்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர அறிவித்துள்ளார்.

மேலும் இந்த கட்டண குறைப்பு எதிர்வரும் ஜூலை 18ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக ஜூலை மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் மின்சாரக் கட்டணங்களை குறைப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டதாகவும் இதன்படி முதல் 30 அலகுகளின் விலைகளை 2 ரூபாவினாலும், 30 முதல் 60 அலகுகளின் விலை 11 ரூபாவினாலும், 60 முதல் 90 அலகுகளின் விலை 12 ரூபாவினாலும், 90 முதல் 180 அலகுகளின் விலை 20 ரூபாவினாலும் குறைப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டதாக தெரிவித்திருந்தார்.

இந்த கட்டணக் குறைப்பு தொடர்பில் இலங்கை மின்சார சபை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு யோசனையை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (நி-6)

## விஜய் தேவரகொண்டா இலங்கை வருகை



(கொழும்பு)

தென்னிந்திய பிரபல நடிகர் விஜய் தேவரகொண்டா படப்பிடிப்பிற்காக இலங்கையை வந்தடைந்துள்ளார்.

விடி12 (VD12) திரைப்படத்தின் படப்பிடிப்பிற்காக அவர் நேற்று முன்தினம் இலங்கைக்கு வந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இலங்கை வந்த விஜய் தேவரகொண்டாவுக்கு பலத்த வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், கௌதம் தின்னனூரியின் இயக்கத்தில் உருவாகும் இப்படத்தின் முதற் கட்டப் படப்பிடிப்புகள் நிறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## இலவச இணையக் கொடுப்பனவு தகவல்களில் உண்மையில்லை

### தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்த ஆணைக்குழு எச்சரிக்கை

(கொழும்பு)

இலவசமாக இணையக் கொடுப்பனவு வசதிகள் வழங்குவதாக செய்யப்படும் விளம்பரங்கள் குறித்து தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அனைத்து தொலைபேசி நிறுவனங்களினாலும் இவ்வாறு இலவச இணைய கொடுப்பனவு வழங்குவதாக விளம்பரம் செய்யப்படுகின்றது.

இவ்வாறான விளம்பரங்களின் இணைப்புகளை அழுத்துவதன் ஊடக சமூக ஊடகக் கணக்கு விபரங்கள் அல்லது அலைபேசி விபரங்களை மூன்றாம் தரப்பிற்கு கிடைக்கும் சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இவ்வாறு அனுப்பி வைக்கப்படும் தகவல்களில் உண்மையில்லை என தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் மேனகா பதிரண எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இவ்வாறு அனுப்பி வைக்கப்படும் லிங்குகளை கிளிக் செய்வதனை தவிர்த்துக் கொள்வது பொருத்தமானது என அவர் அறிவுறுத்தியுள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# காலிறுதியில் உருகுவே, கொலம்பியா கண்ணீருடன் விடைபெற்ற பிரேசில்

கோபா அமெரிக்கா "கால்பந்து காலிறுதியில் உருகுவே அணி 4-2 என "பெனால்டி ஷூட் அவுட்" முறையில் பிரேசிலை வீழ்த்தியது.

அமெரிக்காவில் "கோபா அமெரிக்கா" கால்பந்து 48ஆவது சீசன் நடக்கிறது. இதன் காலிறுதியில் பிரேசில், உருகுவே அணிகள் மோதின. ஆட்டநேர முடிவில் போட்டி கோல் எதுவுமின்றி சமநிலையில் இருந்தது. பின் வழங்கப்பட்ட கூடுதல் நேரத்திலும் (தலா 15 நிமிடம்) இரு அணியினரால் கோல் அடிக்க முடியவில்லை. போட்டியின் முடிவு "பெனால்டி ஷூட் அவுட்" முறைக்கு சென்றது. இதில் உருகுவே அணி 4-2 என்ற கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது. பிரேசில் அணி பரிதாபமாக வெளியேறியது.

அரிசோனாவில் நடந்த மற்றொரு காலிறுதியில் பனாமா, கொலம்பியா அணிகள் மோதின. இதில் கோல் மழை பொழிந்த கொலம்பிய அணி 5-0 என்ற கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது. (நி-6)



# சூடு பிடிக்கும் விம்பிள்டன் டென்னிஸ் கால் இறுதியாட்டங்கள்

இங்கிலாந்தின் லண்டனில் விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றில் அமெரிக்க வீராங்கனைகள் கோகோ காப் (நம்பர்-2), எம்மா நவர்ரோ (நம்பர்-17) மோதினர். முதல் செட்டை நவர்ரோ 6-4 என கைப்பற்றினார். தொடர்ந்து சிறப்பாக செயற்பட்ட நவர்ரோ, அடுத்த செட்டையும் 6-3 என வசப்படுத்தினார். முடிவில் நவர்ரோ 6-4, 6-3 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று, கிராண்ட்ஸ்லாம் அரங்கில் முதன் முறையாக காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு நான்காவது சுற்றில், 135ஆவது இடத்திலுள்ள பிரிட்டனின் எம்மா ரடுகானு, 123 ஆவதாக உள்ள நியூசிலாந்தின் லுலுசன் மோதினர். முதல் செட்டை 6-2 என கைப்பற்றிய லுலு, அடுத்த செட்டை5-7 என இழந்தார். மூன்றாவது, கடைசி செட்டில் சுதாரித்த லுலு, 6-2 வசப்படுத்தினார். 2 மணி நேரம் 50 நிமிடம் நடந்த போட்டியின் முடிவில் லுலு 6-2, 7-5, 6-2 என வெற்றி பெற்றார்.

உக்ரைனின் ஸ்விட்டோலினா, 6-2, 6-1 என சீனாவின் வாங் சினை வென்று காலிறுதிக்குள் நுழைந்தார்.

ஆண்கள் ஒற்றையர் நான்காவது சுற்றில் இத்தாலியின் மசெட்டி, பிரான்சின் பெர்ரிகார்டை சந்தித்தார். இதில் மசெட்டி, 4-6, 6-3, 6-3, 6-2 என வெற்றி பெற்று, காலிறுதிக்குள் நுழைந்தார்.

பிறிதொரு ஆட்டத்தில் செர்பியாவின் ஜோகோவிச் 6-3, 6-4, 6-2 என்ற நேர் செட்கணக்கில் டென்மார்கின் ஹோல்கர் ரூன்னை வீழ்த்தி கால் இறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் ஜேர்மனியின் ஸ்வெரேவ் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். அவரை அமெரிக்காவின் டெய்லர் பிரிட்ஸ் 6-4, 7-6 (7-4), 6-4, 7-6 (7-3), 6-3 என்ற செட் கணக்கில் தோற்கடித்து கால் இறுதிக்கு முன்னேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ஐ.சி.சியின் சிறந்த வீரராக பும்ரா தெரிவு




ஒவ்வொரு மாதமும் சிறந்த கிரிக்கெட் வீரர் மற்றும் வீராங்கனையை தேர்வு செய்து ஐ.சி.சி கௌரவித்து வருகிறது.

அதன்படி ஜூன் மாதத்திற்கான சிறந்த வீரர் மற்றும் வீராங்கனையை தேர்வு செய்ய தலா 3 வீரர் மற்றும் வீராங்கனைகளை ஐ.சி.சி அறிவித்துள்ளது.

இந்த பரிந்துரை பட்டியலில் ரி-20 உலகக் கோப்பை தொடரில் அசத்திய இந்திய கப்டன் ரோகித் சர்மா மற்றும் தொடர் நாயகன் விருது வென்ற ஜஸ்பிரித் பும்ரா ரி-20 உலகக் கோப்பை தொடரில் அதிக ரன்கள் அடித்து அசத்திய ஆப்கானிஸ்தானை சேர்ந்த குர்பாசும் இடம்பெற்று இருந்தனர்.

இந்நிலையில் ஜூன் மாதத்திற்கான சிறந்த வீரர் விருதை ஜஸ்மிரிதி பும்ரா வென்றுள்ளார் நடைபெற்ற ரி-20 உலகக் கோப்பையில் தொடர் நாயகன் விருதை ஜஸ்மிரிதி பும்ரா தட்டிச் சென்றார். இதே போல் சிறந்த வீராங்கனை விருதை இநடதியாவின் ஜஸ் மிரிதி மந்தகா வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக உலகம்

## செலிங்கோ லைஃப் இன் ‘குடும்ப சவாரி’

செலிங்கோ லைஃப்பின் பத்து ஒப்பந்ததாரர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மலேசியாவில் நான்கு அற்புதகரமான மகிழ்ச்சியான நாட்களை அண்மையில் கழித்தமை ஆயுள் காப்புறுதித் தலைவரின் "குடும்ப சவாரி" திட்டத்தின் 17 ஆவது பதிப்பிற்கு மகுடம் சேர்ப்பதாக அமைந்தது.




குழுவின் வேடிக்கையான பயணத் திட்டத்தில், புகழ் பெற்ற சின்னமான பெட்ரோனாஸ் இரட்டைக் கோபுரங்களுக்குச் செல்வது, பெட்ரோனாஸ் டவர்ஸ்க்கு அருகிலுள்ள லேக் சிம்பொனி லைட் அண்ட் வோட்டர் காட்சியினை பார்வையிடுவது, கேஎல்சிசி கடல் வளத்திற்குச் செல்வது, கேபிள் கார் சவாரி மூலம் ஜென்டிங் ஹைலேண்ட்ஸ் சுற்றுப் பயணம் செல்வது மற்றும் படுகுகைகள், முடு பறவை பூங்காவிற்கு செல்வது என்பவை உள்ளடங்கியது.

இந்த சுற்றுப்பயணமானது குழு விற்கு ஒரு விஷேட இரவு உணவு விருந்து உபசதத்துடன் நிறைவு பெற்றது.

செலிங்கோ லைஃப் ஆனது இந்த சுற்றுப்பயணத்துக்கான விமான டிக்கெட்டுகள், தங்குமிடம், உணவு, தரைவழி போக்குவரத்து மற்றும் உல்லாசப் பயணங்களுக்கான டிக்கெட்டுகள் உட்பட விடுமுறை தொடர்பான முழு செலவுகளையும் பொறுப்பேற்றுக் கொண்டது.

இது ‘குடும்ப சவாரி 17’ வெற்றியாளர்களுக்கு வழங்கப்படும் இரண்டாவது வெளிநாட்டு விடுமுறையாகும். பெரும் பரிசு வென்ற ஐந்து செலிங்கோ லைஃப் ஒப்பந்தத்தாரர்களின் குடும்பங்கள், நிறுவனத்தினால் முழு செலவுகளும் பொறுப்பேற்கப்பட்ட துருக்கியில் ஐந்து நாள், விடுமுறையை கழிக்கும் மகிழ்ச்சிகரமான வாய்ப்பினை பெற்று இருந்தனர்.

இந்த வெளிநாட்டு விடுமுறைகளுக்கு மேலதிகமாக, 250 செலிங்கோ லைஃப் ஒப்பந்ததாரர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களை உள்ளடக்கிய சுமார் 1000 பேர் பண்டாரகமவில் உள்ள பேர்ல் பே தீம் பூங்காவிற்கு ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்டனர்.

2023 இல் இருந்து தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக இலங்கையின் ஆண்டின் சிறந்த வர்த்தக நாமமாக தெரிவு செய்யப்பட்ட செலிங்கோ லைஃப் இலங்கையில் மிகவும் போற்றப்படும் 10 நிறுவனங்களில் ஒன்றாக பெயரிடப்பட்டது. 2023 இல் இலங்கை சர்வதேச வர்த்தக சம்மேளனம் (ICCSL) இல் பட்டய மேலாண்மைக் கணக்காளர் நிறுவனத்துடன் (CIMA) ஒத்துழைப்பு மற்றும் இரண்டிலும் "இலங்கையில் மிகவும் மதிப்புமிக்க காப்புறுதி வர்த்தக நாமம்" என்று பிராண்ட் ஃபைனான்ஸ் மூலம் தரவரிசைப்படுத்தப்பட்டது.

செலிங்கோ லைஃப் 36 வருடங்களில் 20 வருடங்களாக நாட்டின் முன்னணி ஆயுள் காப்புறுதி நிறுவனமாக இருந்து வருகிறது.

அத்தோடு நடைமுறையில் உள்ள மற்றும் புதுமையான ஆயுள் காப்புறுதி தீர்வுகளை வழங்குகிறதுடன் காப்புறுதி தாரர்களின் இலக்குகள் மற்றும் அபிலாஷைகளுக்காக ஆபத்து தன்மையினை மட்டுப்படுத்தி நிறுவனம் பாதுகாப்பை வழங்குகின்றன.



சுன்னாகம் கிறிஸ்தவ சேம ஆச்சிரமத்தில் தொண்டராக இருந்த இயேசு சகாயம் அடிகளாரின் பாடல்களின் இறுவெட்டு வெளியீடு அண்மையில் பேராயர் வி.பத்மதாயளன் தலைமையில் இடம்பெற்றது. குறித்த இறுவெட்டின் பாடல் வரிகளைப் பாடிய ப.தேவமித்திரனுக்கு "தெய்வீக சங்கீதன்" என்ற பட்டம் முன்னாள் பேராயர் கலாநிதி ஜெபநேசனால் வழங்கி வைக்கப்பட்டது.

## உயர்தர பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் காலம் நீடிப்பு

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சைகளுக்கான ஒன்லைன் முறையில் விண்ணப்பப்படிவங்களை சமர்பிக்க வழங்கப்பட்ட அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இன்றுடன் முடிவடையவிருந்த நிலையில் ஜூலை 12 ஆம் திகதி வரை 2 நாட்கள் நீட்டிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதி எக்காரணத்திற்காகவும் மாற்றம் செய்யப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## அளவெட்டி வெளிவயல் முத்துமாரியம்பாள் மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி தெற்கு வெளிவயல் ஸ்ரீமுத்துமாரியம்பாள் தேவஸ்தான மஹோற்சவம் நாளை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் உற்சவங்கள் இடம் பெறவுள்ளன.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பரத்திருவிழாவும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30மணிக்கு தேரத் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் அன்று மாலை கொடியிறக்க வைபவமும் இடம்பெறவுள்ளது. (நி-6)

## இராசிபலன்

10.07.2024
ஆனி 26, புதன்கிழமை
சதுர்த்தி முற்பகல் 8.16

மகம் முற்பகல் 11.11 மணிவரை
சுபநேரம் 4.28-5.58 மணிவரை
இராகுகாலம் 11.58-1.28 மணிவரை

சந்திராஷ்டமம் - மூலம், பூராடம்

வளவன்

**மேஷம்** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும், சுப பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு.

**ரிஷபம்** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்

**மிதுனம்** உறவினர்களின் ஒத்துழைப்பால் பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும் நாள்.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**சிம்மம்** வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், சிந்தனை மிகுதியான நாள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.

**கன்னி** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், விரதங்களில் நம்பிக்கை கூடும், சயன சுகக் குறைவான நாள், தேவையற்ற மனசஞ்சலங்களை தவிர்ப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துலாம்** திடீர் பணவரவால் மகிழ்ச்சியடைவீர்கள், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், குடும்ப மகிழ்ச்சி கூடும், காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்** உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொலைபேசித்தகவல்கள் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும்

**தனுசு** வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள், மனம் மாறுவர்.

**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**கும்பம்** குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மீனம்** உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், அலுவலகப் பணிகள் துரிதமாகும், ஆரோக்கியம் சீராகும், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள்.

உண்மையைச் சொல்வதற்கு நினைவாற்றல தேவையில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி வைத்தியசாலையில்

## அவசர சிகிச்சை, மகப்பேற்று விடுதிகள் விரைவில்

## புதிய வைத்திய அத்தியட்சகர் உறுதி

**(சாவகச்சேரி)** — **சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முக்கிய பிரச்சினைகளான அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் மகப்பேற்று விடுதியின் மேலதிக பணிகளை விரைவில் பூர்த்தி செய்ய எதிர்பார்த்திருப்பதாக வைத்தியசாலையின் புதிய வைத்திய அத்தியட்சகர் ரஜீவ் தெரிவித்துள்ளார்.**

நேற்றுக் காலை புதிய வைத்திய அத்தியட்சகராக தனது கடமைகளைப் பொறுப்பேற்ற நிலையில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,


மத்திய சுகாதார அமைச்சின் கடிதத்திற்கு அமைவாக எனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளேன். நான் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்தவன். பொதுமக்களுடைய தேவையை அறிந்து வைத்தியசாலையை முன் கொண்டு செல்ல எனது உழைப்பை வழங்குவேன்.

வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகள் எந்த இடத்தில் இருக்கின்றனவோ அதனை மேம்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுப்பேன். மாகாண சுகாதார சேவைகள் பணிமனை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, வைத்தியசாலை பணியாளர்கள், பொதுமக்கள், சமயத் தலைவர்களது பங்களிப்போடு அபிவிருத்திப் பணிகள் நடைமுறைக்கு கொண்டுவரப்படும். அந்தவகையில் தற்போது வைத்தியசாலையில் பிரதான பிரச்சினையாக உள்ள மின் பிறப்பாக்கி பிரச்சினைக்கு ஓரிரு நாட்களுக்குள் தீர்வு எட்டப்படும். பொதுமக்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள் தெரியப்படுத்தியுள்ளனர்.

அவற்றை ஆராய்ந்து நிறைவேற்றுவேன் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (நி-6-30)

# யாழில் வீடொன்றின் மீது வன்முறைக்கும்பல் தாக்குதல்

- உடமைகள் சேதம்
- வாகனங்களுக்கு தீ வைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழில் உள்ள மரக்காலை ஒன்றின் உரிமையாளரின் வீட்டினுள் அத்துமீறி நுழைந்த வன்முறைக் கும்பல் ஒன்று வீட்டின் மீது தாக்குதல் நடத்தி உடமைகளுக்கு சேதம் விளைவித்ததுடன் வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களுக்கும் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

ஓட்டுமடம் பகுதியில் உள்ள மரக்காலை ஒன்றின் உரிமையாளரின் வீட்டினுள் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை அத்துமீறி நுழைந்த வன்முறைக்கும்பல் ஒன்றே குறித்த தாக்குதலை நடத்தியுள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-6-33)



கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய எண்ணெய்க்காப்பு சாத்தல் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. (படம்: தேவானந்தன்)

# போதைப்பொருளுடன் கைதான பெண் நீதிமன்றிலிருந்து தப்பியோட்டம்

## மீள கைது செய்யப்பட்டு மறியலில்

(யாழ்ப்பாணம்)

போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான பெண் நீதிமன்றில் இருந்து தப்பிச் சென்ற நிலையில் மீள கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்

யாழ்.பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் அழைத்துச் சென்ற வேளை தான் மலசலகூடம் செல்ல வேண்டும் என்று கேட்டதற்கு இணங்க பொலிஸார் நீதிமன்ற வளாகத்தில் உள்ள மலசல கூடத்திற்கு அழைத்துச் சென்ற நிலையில் உள்ளே சென்ற பெண் கதவினை உட்புறமாக மூடிவிட்டு மலசல கூடத்தின் மேற்பகுதியில் இருந்த சிறிய ஜன்னல் ஊடாக தப்பிச் சென்றுள்ளார்.

நீண்ட நேரமாகியும் உள்ளே சென்ற பெண் வராததால் சந்தேகம் அடைந்த பொலிஸார் பெண்ணை அழைத்தும் உள்ளே இருந்து பதில் வராததால் கதவினை உடைத்து பார்த்த போதே பெண் தப்பிச் சென்றது தெரியவந்துள்ளது.

தப்பிச் சென்ற பெண்ணை கைது செய்வதற்கு பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்த வேளை போதைப் பொருள் வியாபாரம் நடைபெறும் இடம் என சந்தேகிக்கப்படும் இடத்தினை பொலிஸார் கண்காணித்த வேளை காலையில் நீதிமன்ற வளாகத்தில் இருந்து தப்பிச்சென்ற பெண் அங்கு நடமாடிய நிலையில் மீள கைது செய்யப்பட்டார்.

அதனை அடுத்து கைது செய்யப்பட்ட பெண்ணை மன்றில் முன்னிலையில் முற்படுத்தப்பட்டதை அடுத்து 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டது. (நி-6-33)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 250-350 | 250 |
| உருளைக்கிழங்கு | 250 | 260 | 220 | 250 |
| பச்சைமிளகாய் | 350 | 250 | 200-300 | 450 |
| தக்காளி | 350 | 550 | 350 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 160 | 100-120 | 240 |
| கோவா | 300 | 300 | 350 | 300 |
| கரட் | 350 | 500 | 500 | 500 |
| பூசணி | 160 | 180 | 150 | 200 |
| புடோல் | 160 | 250 | 200 | 240 |
| வாழைக்காய் | 250 | 240 | 160-220 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 450 | 250-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 260 | 230 | 200 |
| பாகற்காய் | 1200 | 700 | 800 | 1000 |
| வெண்டக்காய் | 200 | 250 | 250 | 320 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 450 | 300 | 300-400 | 400 |
| லீக்ஸ் | 500 | 450 | 380 | 600 |
| பீற்றூட் | 550 | 500 | 500 | 400 |
| கறிமிளகாய் | 600 | 700 | 500 | 700 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 500-800 | 800 |
| போஞ்சி | 600 | 650 | 450 | 600 |
| கத்தரி தம்புள்ள | 250 | 200 | -- | 240 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 50 | 100 |
| தேசிக்காய் | 600 | 1000 | 600-800 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | -- | 500 |
| வெங்காயப்பூ | 450 | 350 | -- | 400 |
| முள்ளங்கி | 100 | 160 | 150 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 |
| ஈரப்பலா | 120 | 100 | 100 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலி சப்ரி ரஹீமிற்கு பிடியாணை

(புத்தளம்)

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமிற்கு எதிராக, கற்பிட்டி சுற்றுலா நீதிவான் நீதிமன்றம் திறந்த பிடியாணையைப் பிறப்பித்துள்ளது.

கற்பிட்டி பகுதியில் உள்ள அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் கட்டடத்துக்குள் அத்துமீறி பிரவேசித்து அதன் சொத்துக்களை சேதப்படுத்தியதாக அவர் மீது குற்றச்சாட்டு முன்வைத்து வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணைகளில் அவர் முன்னிலையாகாத நிலையில் அவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-6)

## வேலை நிறுத்தப் போராட்டங்களினால் கேள்விக் குறியாகும் மாணவர்களின் கல்வி



(கொழும்பு)

"தேர்தல் நெருங்கும் நேரத்தில் அநீதியான வகையில் வேலை நிறுத்தங்களை முன்னெடுப்பதனால் பிள்ளைகள் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்துள்ளனர்" என தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மக்களின் நிம்மதியான வாழ்க்கை நிலையைச் சீர்குலைப்பதற்காகவே குறித்த வேலை நிறுத்தங்கள் மற்றும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றதா? என்ற கேள்விக்கும் எதிர்க்கட்சிகள் பதிலளிக்க வேண்டும் என இராஜாங்க அமைச்சர் கேள்வியெழுப்பியுள்ளார்.

மேலும் தற்போதைய தொழில்சார் நடவடிக்கைகளின்படி அனைத்து அரச ஊழியர்களுக்கும் 20,000 ரூபாய் கொடுப்பனவு கோரப்பட்டுள்ளதாகவும் அந்த கொடுப்பனவை வழங்குவதற்கு வருடத்திற்கு சுமார் 280 பில்லியன் ரூபாய் மேலதிகமாகச் செலவு செய்ய வேண்டியிருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## வாகன புகை பரிசோதனை செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் "வாகன புகை பரிசோதனை நிகழ்ச்சித் திட்டம்" தொடர்பான விசேட செயலமர்வு கடந்த வெள்ளிக்கிழமை அன்று மாவட்ட செயலக பயிற்சி நிலையத்தில் பிரதான மோட்டார் வாகன பரிசோதகர் சி.சிவராஜா தலைமையில் நடைபெற்றது.

இங்கு வளவாளர்களாக பிரதான மோட்டார் வாகன பரிசோதகர் கே.மதிவண்ணன் பரிசோதனை அலுவலர் என்.எம்.எஸ்.மர்சூக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச் செயற்றிட்டத்தில் கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சாரதி பயிற்சி பாடசாலைகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். யாழ்.மாவட்டத்தில் முதலாவதாக இச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். (நி-6)

## நந்திக்கடல், சாலையாற்றினை ஆழப்படுத்த நடவடிக்கை எடுங்கள்

### கடற்றொழிலாளர்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவின் நந்திக் கடல், சாலை ஆறு என்பவற்றினை ஆழப்படுத்துமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவிற்கு வருகை தந்த கடற்றொழில் அமைச்சரிடமே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டில் இருந்து நந்திக் கடலில் உள்ள சேறு அகற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ச்சியாக விடுக்கப்பட்டு வருகின்றது.

2009 ஆம் ஆண்டு போர் நடைபெற்ற போது அமைக்கப்பட்ட மண் அணைகள் கரைந்து நந்திக் கடல், சாலை ஆறுகளில் நிறைந்திருப்பதன் காரணமாக நீர்மட்டம் குறைவடைந்திருப்பதன் காரணமாக ஆறுகளில் இறால் உட்பட கடல் உணவுகளின் பெருக்கம் குறைந்து காணப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டில் இருந்து நந்திக் கடலில் உள்ள சேறினை அகற்றுங்கள் என கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை சேறு அகற்றப்படவில்லை.

இதே போன்று சாலை ஆறும் மண் அணைகள் கரைந்து ஆற்றில் நிறைந்திருப்பதன் காரணமாக சாலை ஆற்றில் கடல் உணவுகளின் பெருக்கம் மிகக் குறைவாக காணப்படுகின்றது.

நாரா நிறுவனம் சாலை ஆற்றில் ஆய்வுகளையும் மேற்கொண்டது. ஆனால் ஆழப்படுத்துவதற்கான முயற்சிகள் இதுவரை இடம்பெறவில்லை.

இதன் காரணமாக நந்திக் கடல் மற்றும் சாலை ஆற்றினை நம்பியுள்ள கடற்றொழிலாளர்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர். (நி-6-350)

## ஸ்ட்ரோபெரி செய்கை வெற்றி

(கொழும்பு)

ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு நுவரெலியாவில் பயிரிடப்பட்ட ஸ்ட்ரோபெரி செய்கை வெற்றியளித்துள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த மாதிரி செய்கை அரச அனுசரணையில் முன்னெடுக்கப்படும் முதலாவது திட்டமாகும்.

நுவரெலியாவின் பிளாக்பூல் பகுதியில் 52 விவசாயிகளின் பங்களிப்புடன் 40 பசுமை இல்லங்களில் இந்த பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (நி-6)


**லங்கா மஹால் (PVT) LTD**

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 00919566156719

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,

077 839 3974

(145)



**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1996 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 21<br>1 இல் செவ்<br>உயரம்: 6<br>தகைமை/தொழில்:Bachelor of ICT, Software Engineer<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Banker, Lecturer<br>தொ.இ: B/14646 | பிறப்பு:1998 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: College, Teacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/14672 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L, Driver<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு, உள்நாடு எனின் உத்தியோகம்<br>தொ.இ: B/14648 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 16<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:Bsc, Biology Teacher<br>எதிர்பார்ப்பு: Teacher, Doctor, Engineer, Banker<br>தொ.இ: G/14673 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 27 1/4<br>8 இல் செவ்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:Technical Officer<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/14649 | பிறப்பு: 2001 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>2 இல் செவ்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/14676 |

கல்யாணமாலை

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்



சுழிபுரம்-பறாளாய்

**ஈசுர விநாயகர் தேர்த் திருவிழா**

காலம்: 11.07.2024 நாளை வியாழக்கிழமை

நேரம்: காலை 11.30 மணியளவில்


சோழியூரான் பிறைசூடிக்குருக்கள்
ஆன்மீகவாதியும் சந்ததிப் பூசகரும்
பரம்பரைப் பரிபாலகரும்

(சி-763)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## போர் பதற்றத்திற்கு மத்தியில் புடினை சந்தித்த மோடி



(மொஸ்கோ)

ரஷ்யா சென்றுள்ள இந்திய பிரதமர் மோடி ஜனாதிபதி விளாடிமிர் புடினை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தியா-ரஷ்யா இடையிலான 22 ஆவது உச்சி மாநாட்டில் பங்கேற்க 2 நாள் அரசு முறைப் பயணமாக நரேந்திர மோடி நேற்று முன்தினம் ரஷ்யா சென்றுள்ளார்.

அவருக்கு மொஸ்கோ விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டதுடன் பிரதமர் நரேந்திர மோடியை ரஷ்யா துணைப் பிரதமர் டெனிஸ் மாந்துரோவ் வரவேற்றுள்ளார்.

இதனை தொடர்ந்து நேற்று இரவு அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடினை ஜனாதிபதி மாளிகையான கிரம்ளின் மாளிகையில் சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது இரு நாடுகளிடையே பரஸ்பரம் நட்புறவு குறித்தும் எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டுள்ளது.

இந்தியா - ரஷ்யா உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி, பங்கேற்கவுள்ளதுடன் மோடிக்கு ரஷ்யாவின் உயரிய விருது வழங்கி கௌரவிக்கப்பட உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## பங்குச்சந்தை கட்டடத்தில் தீ



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பங்குச் சந்தைக் கட்டடத்தில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக வர்த்தகம் சிறிது நேரம் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கராச்சியில் அமைந்துள்ள பாகிஸ்தான் பங்குச் சந்தைக் கட்டடத்தின் நான்காவது மாடியிலேயே நேற்று முன்தினம் முற்பகல் குறித்த தீ விபத்து ஏற்பட்டது.

இந்நிலையில் பங்குச் சந்தை கட்டடத்தில் இருந்த அனைவரையும் மீட்புப் படையினர் பத்திரமாக வெளியே கொண்டு வந்துள்ளதோடு சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த 6 தீயணைப்பு வாகனங்கள் மூலம் தீ கட்டுப்படுத்தப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சார இணைப்பில் ஏற்பட்ட தொழில் நுட்பக் கோளாறு காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

மேலும், இந்த விபத்து சம்பவத்தில் எவ்வித உயிர்சேதமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

சிறுவ

உக்ரை

ரஷ்ய

❖ 37

❖ 171

(கீவ்)


உக்ரைனின் த

வைத்தியசாலை


ரஷ்யா மேற்கொ

அதிகமானவர்கள்

படுகாயமடைந்துள்



## டைட்டானிக் பட தயாரிப்பாளர் காலமானார்



(வோஷிங்டன்)

டைட்டானிக், அவதார் படங்களின் தயாரிப்பாளரான ஜான் லாண்டவ் காலமானதாக சமூக வலைத்தளங்களில் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

ஜான் லாண்டவ் சமீப காலங்களில் புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்த நிலையில் திடீரென சிகிச்சை பலனின்றி ஜான் லாண்டவ் உயிரிழந்துள்ளார்

அத்துடன் ஜான் லாண்டவ் மறைவுக்கு திரை உலக பிரபலங்கள் மற்றும் இரசிகர்கள் தங்களின் இரங்கல்களை தெரிவித்து வருகின்றனர். (நி-6)

## ஹிஸ்புல்லாவுக்கு முழு ஆத ஈரானின் புதிய ஜனாதிபதி ம

(டெஹ்ரான்)

ஹிஸ்புல்லாவுக்கு முழுமையான பொருளாதார மற்றும் இராணுவ உதவிகளை வழங்கவுள்ளதாக ஈரானின் புதிய ஜனாதிபதி மசூத் பெசெஸ்கியன் உறுதியளித்துள்ளார்.

ஈரானில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் சீர்திருத்தவாத கட்சி வேட்பாளர் மசூத் பெசெஸ்கியன் வெற்றி பெற்று ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார். இந்நிலையில், இஸ்ரேல் - காசா போர் குறித்து கருத்து தெரிவித்துள்ள அவர், ஈரானின் அரசு ஊடக மொன்றினூடாக ஹிஸ்புல்லா கிளர்ச்சியாளர்கள் அமைப்புக்கு ஈரான் அரசு முழு ஆதரவு வழங்குவதாக அவ்வமைப்பின் தலைவர் ஹாசன் நஸ்ரல்லாவுக்கு உறுதியளித்துள்ளார். இந்த ஆதரவானது இஸ்லாமியக் குடியரசாக விளங்கும் ஈரானின் அடிப்படை கொள்கைகளில் ஒன்று எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் பாலஸ்தீனத்தின் காசா மீது இஸ்ரேல் மேற்கொண்டுள்ள அட்டூழியங்களை நிறுத்த ஹிஸ்புல்லா போன்ற எதிர்ப்பு இயக்கமே தீர்வு என்பதில் தான் உறுதியாக உள்ளதாகவும் ஈரானின் புதிய ஜனாதிபதி மசூத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஹிஸ்புல்லா



வு ஈ பே தக் எச் அ புல் இஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ...றுவர் வைத்தியசாலை உட்பட ...ரைனின் பல இடங்களில் ...யா எறிகணை வீச்சு!

## 37 பேர் உயிரிழப்பு 171 பேர் படுகாயம்

...ின் தலைநகரில் உள்ள சிறுவர் ...ாலை உட்பட பல நகரங்களின் மீது ...ற்கொண்ட தாக்குதலில் 37 இற்கும் ...வர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 171 பேர் ...டைந்துள்ளனர்.





உக்ரைனின் பல நகரங்களை இலக்கு வைத்து வழமைக்கு மாறான பகல்நேரத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


இதன்போது உக்ரைன் தலைநகரில் உள்ள பிரதான சிறுவர் மருத்துவமனையான ஒக்மாடிட் மீது தாக்குதல் இடம்பெற்றுள்ளது என உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


மருத்துவமனையிலிருந்து புகைமண்டலம் வெளியாவதையும் இடிபாடுகளிற்குள் தேடுதல்கள் இடம்பெறுவதையும் தாக்குதல்கள் இடம்பெற்ற வேளை சிறுவர்களை எவ்வாறு காப்பாற்ற முயன்றனர் என்பதை மருத்துவமனையின் பணியாளர்கள் விபரிப்பதையும் காண்பிக்கும் படங்கள் வெளியாகியுள்ளன.

மேலும் உக்ரைனுக்கு ஆயுத உதவிகளை அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள் வழங்கி வருகின்றன.

போரை நிறுத்த பல்வேறு நாடுகள் முயற்சித்துவரும் நிலையில் அமைதி பேச்சுவார்த்தைக்கு இருநாடுகளும் உடன்படாத நிலையில் போர் தொடர்ந்து நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## ...ு ஆதரவு வழங்கவுள்ளதாக ...தி மசூத் பெசெஸ்கியன் உறுதி





...ல்லா
...புக்கு
...ழங்கு
...லவர்
...றுதிய
...ானது
...ிளங்
...ர்கை
...குறிப்
...ஸ்தீ
...ரேல்
...ியங்
...ான்ற
...பதில்
...கவும்
...மசூத்

...ல்லா

...வுக்கு ஆதரவு அளித்து வரும் ஈரான், லெபனான் மீது இஸ்ரேல் போர் தொடுத்தால் இஸ்ரேலுக்கு தக்க பதிலடி கொடுப்போம் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

இஸ்ரேலுக்கு அருகாமையில் அமைந்துள்ள லெபனானில் ஹிஸ்புல்லா கிளர்ச்சியாளர்கள் அமைப்பு இயங்கி வருகின்றது.

ஹமாஸ் அமைப்பை ஒழிப்பதாக கடந்த 8 மாதங்களாக பாலஸ்தீனிய நகரங்கள் மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், லெபனான் எல்லையில் இருந்து இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## பதவியைக் கொடுத்துவிட்டு பறந்தார் சைக்கிளில் பிரதமர்



(ஆம்ஸ்டர்டாங்)

14 ஆண்டுகளாக நெதர்லாந்து பிரதமராக இருந்த மார்க் ரூட் தனது பதவிக் காலம் முடிந்ததும் புதிய பிரதமர் டிக் ஸ்கூஃப் இடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு துவிச்சக்கர வண்டியில் சென்றமை பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இது குறித்து கிரண்பேடி தனது எக்ஸ் தளபக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

14 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த பின் நெதர்லாந்து முன்னாள் பிரதமர் மார்க் ரூட்டே தனது வாரிசான டிக் ஸ்கூஃப்க்கு அதிகாரபூர்வமாக அதிகாரம் வழங்கும் விழாவை முடித்துக் கொண்டு பிரதமர் அலுவலகத்தை விட்டு சைக்கிளில் மகிழ்ச்சியுடன் வெளியேறிய வீடியோவை பதிவு செய்துள்ளார்.

இந்த வீடியோவானது சமூகவலைதளங்களில் அதிகமாக பகிரப்பட்டு பலரது கவனத்தை ஈர்த்துள்ளது. (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிரோஜா என்னும் வந்தேறுகளையின் வீரியம்




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

கடந்த வாரம் எமது கைத்தொலை பேசிக்கு ஒருவரின் வீட்டுதொலை பேசியிலிருந்து அழைப்பொன்று வந்தது. மறுபக்கத்தில் 85 வயதுடையவரது குரல் விநயமாக அழைத்தது. சித்தங்கேணி பகுதியிலிருந்து அழைப்பதாகவும் வலம்புரியின் வாசகராகவும் இப் பத்திரிகையில் வரும் கட்டுரைகளை தொடர்ந்து வாசிப்பதாகவும் தெரிவித்து எமது கைப்பேசி இலக்கத்தை பெறுவதற்காக அங்கிருந்து யாழ்நகரிலுள்ள வலம்புரி பத்திரிகை அலுவலகத்திற்கு ஆட்டோவில் வந்து பெற்றுக் கொண்டதாகவும் அழைப்பை எடுத்ததற்கான காரணத்தையும் விளக்கினார்.

பெரியவர் கூறிய பிரச்சினை பற்றி முழுமையாக அறிந்துகொள்ள அவர் வீடு சென்று வினவியபோது மகிழ்ச்சியுடன் என்னை தமது காணிக்கு கூட்டிச்சென்று தாவரக் களையொன்றை அடையாளப் படுத்தினார்.ரோஜா நிறபூக்களை அதிக

நிறத்தில் கொத்து
கொத்தாக பூத்
துக்குலுங்கும்.
தேனீக்கள் அதி
கம் வந்து மகரந்த
மணிகளையும்
தேன் சுரப்பை
யும் எடுத்துச் செல்
லும் தாவரமாக
காணப்படும்.
பயன்பாடற்ற
நிலங்களில் இது
வளர்ந்தால் மகர
ந்த செயற்கையா
ளர்களுக்கு நன்மைதரும் தாவரமாக கருதலாம். ஆனால் பயிர்ச்செய்கை நிலத்தில் வந்து சேர்ந்துவிட்டால் இதனை அகற்றுவது அல்லது அழிப்பது என்பது மிகவும் சுலபமான காரியமல்ல. விதைகளினால் பரவலடையும். குறிப்பாக நீரில் எடுத்துச் செல்லப்பட்டு புதிய இடங்களில் வளரத் தொடங்கிவிடும். வித்துக்களின் வாழ்தகவும் அதிலிருந்து உருவாகும் தாவரத்தின் வாழ்திறனும் அதிகமாக இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனது




மாக உற்பத்தி செய்து ஓரளவிற்கு பெரிய இருவித்திலை இலைகளுடன் கொடியாக பரந்து காணப்பட்டது. இத்தாவரக் களை சிறிய துண்டாக மதில் மேல் யாரோ வைத்ததை அலட்சியம் செய்ததால் தன்னுடைய காணியினோரத்திலே அவை விழுந்து வளர்ந்து தற்போது காணியெங்கும் ஆங்காங்கே பரவி அழிக்கமுடியாமல் மல்லுக்கட்டிக் கொண்டிருப்பதாக விளக்கினார். ஓரளவிற்கு காணியெங்கும் பரவி விட்டிருக்கின்றது. காணிக்கான பாதைக்காக கல்லுப் பரவியிருப்பதால் அந்த இடத்தில் இன்னும் அதிகமாக ஆழவேரோடி பரவியிருப்பதையும் சிறிய கொடிகன்றுகளையும் காண்பித்தார். அவர் காண்பித்த அந்த களை பற்றி அறிந்ததை தொடர்ந்து விளக்கியிருக்கின்றேன்.

இது கொடிரோஜா அல்லது ரயில் வேகிரீப்பர் என அழைக்கப்படும் அன்ரிகொணன் லெப்ரோப்பஸ் (Antegononleptopus), என்னும் தாவரவியல் பெயருடைய பொலிகோணேசியே குடும்பத்தைச் சார்ந்த பல்லாண்டு கொடிவகை பூக்குந்தாவரம். இதன் பூர்வீகம் மெக்சிக்கோ என்றாலும் அங்கிருந்து பல்வேறு நாடுகளுக்கு அழகுத் தாவரமாக விரும்பி எடுத்துச் செல்லப்பட்ட கொடித்தாவரமாகும். புகையிரத நிலையங்களில் வளர்ந்து பூத்துக் குலுங்கியிருக்கும். ரோஜாநிற பூக்களுக்காக பல இடங்களில் விரும்பி நடுகை செய்திருப்பதையும் அறிய முடிகின்றது. பூக்களை ஒன்று சேர காணும்போது அழகாகவும் இருக்கும். அழகுக்காக நாடுவதனைத்தும் இறுதியில் ஆபத்தில் முடிந்து விடுகின்றது என்பதற்கு இதுவும் உதாரணமாகியிருக்கிறது பாருங்கள். பல்லாண்டு கொடித்தாவரமாதலால் நிலத்தில் ஆழ வேர்விட்டு பரந்து வரட்சியைக் கூட எளிதில் தாக்குப் பிடித்துவிடும் அதிசய தாவரமாகும்.

பூக்கள் அழகானவை. ரோஜா

கிழங்குநிலத்தில் ஆழ பரந்து வேரூன்றிகிளைவிட்டு பலமாக வளர்ந் துவிடும். பொதுவாக வேலிகளில் இலகுவில் வளர்ந்து காணப்படும்.

பயிர்நிலங்களில் இந்த களை ஊடுருவாது பார்த்துக்கொள்ள வேண்டும். வளரத் தொடங்கி விட்டால் கைகளால் முடிந்தளவுக்கு பிடுங்கி அழித்துவிடல் வேண்டும். இடங்கண்ட இடத்தில் விரைந்து வளரத் தொடங்கிவிடும் கொடி ரோஜாவை ஆரம்பத்திலேயே முளையிலேயே கிள்ளிவிடுவதைப் போல கட்டுப்படுத்திவிட வேண்டும். நிலக்கிழங்கு காணப்படுவதனால் கிழங்குவிட்டபின்னர் மேல் பகுதியை அகற்றுவதால் எந்த பயனுமில்லை. கிழங்கிலிருந்து புதிதாக வளர்ச்சி ஏற்பட்டு தாவரம் மீண்டும் தளைத்துவிடும். கொடியென்பதால் விரைந்து வ்ளர்ந்த பரந்து தேவையான ஊட்டச்சத்துக்களை மண்ணிலிருந்து பெற்றுக் கொள்ளும். வரட்சியை தாங்கும் இயல்பு இயல்பாகவே இதற்கு இருப்பதனால் நீரின்றி ஏனைய பயிர்கள் இறந்தாலும் இது அழிந்துவிடாது.

ஆரம்பத்தில் நிலம் ஈரப்பற்றாக இருக்கும் போது கைகளால் வேருடன் பிடுங்கி எரித்து விடுவது மிகவும் வினைத்திறனான செயலாகும். மாறாக வளரவிட்டால் பின்னர் அதனை கட்டுப்படுத்துவது என்பது மிகவும் கடினமான காரியமாக இருக்கும். நிலத்தில் கிழங்கு வைத்து விட்டால் இன்னும் பிரச்சினை பெரிதாகி விடும். பூ அழகாக இருக்கின்றதென்று வயல் பகுதிகளில் இதனை வளரவிடாது கட்டுப்படுத்தி வைத்தி ருப்பது நல்லது. அகன்ற இலையுடைய தாவரமாதலால் ரவுண்டப் (கிளைபோசேற்று) களை நாசினியை பாவித்து அனைத்து வகை தாவரங்களையும் கட்டுப்படுத்திவிடலாம். ரவுண்டப் களைநாசினியை விசிறி விட்டு அவற்றை காய்ந்தவுடன் கூட்டி எரித்து விட்டால் ஓரளவுக்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம். பின்னர் சிறிதாக வளரும் செடிகளை கைகளால் பிடுங்கி எரித்துவிடலாம். வளர்ந்து விட்டால் களைநாசினி அதிகம் தெளிக்க வேண்டியேற்படும். தற்போது பீடைநாசினி கடைகளில் புதியவகை கம்பனி பெயர்களுடனும் இக்களை நாசினிகள் கிடைக்கின்றன. தெரிந்தெடுத்து அவதானத்துடன் களைநாசினிகளை பாவித்து இதனை கட்டுப்படுத்தமுடியும்.

---

## இன்று ஒரு தகவல் 178



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# தர்மமும் கர்வமும்

தருமம் தலைகாக்கும் என்று பெரியவர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள் எதற்காக? எல்லோரும் தலையைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவா அப்படி இல்லை. ஒருவர் செய்கின்ற தருமம் அவருடைய தலைமுறையையே காப்பாற்ற வேண்டும் என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு பத்து காசினை ஒருவருக்கு கொடுத்து விட்டு ஊர் முழுவதும் சொல்லிக்கொண்டு திரிவதற்கு பேர் தர்மம் இல்லை விளம்பரம். பசிக்கிறது என்று சொல்லிக் கொண்டு ஒருவர் வருகிறார். நாம் அவரைக் கூப்பிட்டு உட்காரவைத்து சோறு போடுகின்றோம் என்றால் அவருடைய பசி தீர வேண்டும் என்பது தான் எம் நோக்கமாக இருக்க வேண்டும். அவருடனே நாமும் உட்கார்ந்து சாப்பிட்டு அதை விளப் பரப்படுத்த வேண்டும் என்று ஆசைப்படால் அந்த நோக்கம் வேறு என்று அர்த்தம்.

தர்மம் செய்கின்றவருக்கு கர்மம் இருக்கக்கூடாது என்கின்ற கருத்து புராணங்களிலே வலியுறுத்தியிருக்கின்றது. தருமரைப் பற்றி உங்களுக்கு தெரியும். அவர் ஏழை எளியவர் மேலே இரக்கம் கொண்டவர். தாராளமாக தர்மம் செய்கின்றவர். அப்போது பாதாளத்திலே மகாபலி சக்கர வர்த்தி ஆட்சி செய்துகொண்டிருந்தார். மகாபலி தான தர்மம் செய்வதில் மிகவும் பெரியவர். அவரிடம் இருக்கின்ற விருந்தோம்பு பண்பை உலகம் முழுவதும் பாராட்டிக் கொண்டு இருக்கிறது.

அந்த சமயத்திலே ஸ்ரீ கிருஷ்ணரும் தர்மபுத்திரரும் பாதாளலோகத்திலே உள்ள ஒரு தெருவழியாகப் போய் கொண்டிருந்தனர். தருமர் ஒரு வீட்டுக்குப் போய் குடிப்ப தற்கு கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள் என்றார். அந்த விட்டுக்கார அம்மா ஒரு தங்கக்கிண்ணத்திலே தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தார். அவரும் வாங்கிக் குடித்தார். குடித்துவிட்டு வெறும் கிண்ணத்தை திருப்பிக் கொடுத்தார். அந்த அம்மா அதை வாங்க மாட்டேன் என்று விட்டார்கள். ஐயா எங்கள் நாட்டிலே ஒரு முறை உபயோகப்படுத்தியதை அது தங்கமாக இருந்தாலும் தூக்கி எறிந்துவிடுவோம் என்றார்கள். தருமருக்கு ஆச்சரியமாக போய்விட்டது. அந்த நாட்டுமக்களுடைய செல்வச் செழிப்பை புரிந்து கொண்டார்.

அதன்பின் தருமரும் ஸ்ரீ கிருஷ்ணரும் புறப்பட்டு நேராக மகாபலி ராஜாவின் அரண்மனைக்குச் சென்றார்கள். ராஜாவிடம் தருமரை அறிமுகப்படுத்தினார் ஸ்ரீ கிருஷ்ணர் அரசே! இன்றைக்கு தர்மபுத்திரரை தங்கள் ராஜ்யத்திற்கு அழைத்துக் கொண்டுவந்திருக்கிறேன். இவர் தான் தரு மங்கள் செய்வதில் மிகவும் புகழ் பெற்றவர். ஒவ்வொரு நாளும் இவர் 500 பேருக்கு அன்னதானம் செய்கின்றார் என்றார். இதைக் கேட்டவுடன் மகாபலி என்ன செய்தார் தெரியுமா? உடனே தன்னுடைய இரண்டு காதையும் கையாலே பொத்திக்கொண்டார்.

நீங்கள் சொல்லும் செய்தி என் காதிலே விழவேண்டாம். என்னிடம் அதைச் சொல்லாதீர்கள். அப்படிப்பட்ட ஒருவரை பற்றி நான் கேட்கத் தயாராக இல்லை. இங்கே என் ராஜ்யத்திலே நான் தானம் செய்வதற்கு எவ்வளவு முயற்சி செய்கிறேன். அதை வாங்குவதற்கு ஒருவர் கூடகிடைக்கவில்லை. அந்த நிலைமையிலே யாரும் இல்லை. ஆனால் நீங்கள் தருமர் 500 பேருக்கு அன்னதானம் செய்வதாக சொல்கின்றீர்கள் அப்படி என்றால் அவருடைய ராஜ்யத்திலே 500 ஏழைகள் இருக்கின்றதாக அர்த்தம். அதிலி ருந்தே அவர் எப்படி ஆட்சி செய்கின்றார் என்பது புரி கின்றது. அப்படிப்பட்ட ஒருவரைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு நான் தயாராக இல்லை என்று சொல்லி விட்டார் மகாபலி சக்கரவர்த்தி.

அதை கேட்டதும் தர்மருக்கு வெட்கமாகப் போய்விட்டது தலைகுனிந்தார். அங்கே இருந்த கர்வமும் போய்விட்டது. இந்தக் கதையை சுவாமி ஒருவர் எடுத்துச் சொல்லி யிருக்கின்றார். எதற்காக என்றால் தர்மம், கர்வத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான். எங்களிலே சில பேர் பிள்ளைகளுக்கு தர்மர் என்று பெயர் வைப்பார்கள். அப்படியாவது தர்மச்சிந்தனை வரட்டும் என்று.

ஒரு பெரியவருக்கு ஜந்து பிள்ளைகள். ஜந்து பிள்ளைகளுக்கும் பஞ்சபாண்டவர் பெயர்களையே வைத்தார். அவர்கள் மாதிரியே வாழ வேண்டும என்பதற்காக. ரொம்ப நாள் கழித்து அந்தப் பெரியவரைக் கடைத்தெருவிலே பாரத்து ஒருவர் கேட்டார் பஞ்சபாண்டவர் பேரை அவர்களுக்கு வைத்தேன் பேருக்கு தகுந்த மாதிரியே இருக்கிறார்கள் என்றார் பெரியவர். அப்படியா என்றார் அவர். ஆமாம் சொத்து முழுவதையும் சூதாட்டத்திலேயே விட்டுவிட்டார்கள் என்றார் பெரியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்து சேவையின்மையால் வைத்தியசாலைக்கு வருவோர் சிரமம்

## வழித்தட சேவையை விஸ்தரிப்பு செய்ய கோரிக்கை

**அக்கராயன்**

**கிளிநொச்சி மேற்கில் உள்ள இரு வைத்திய சாலைகளுக்கான பேருந்துகள் வந்து செல்லக்கூடிய வகையில் வழித்தடங்கல் சேவையை முன்னெடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்**

கிளிநொச்சி மேற்கிற்கான பேருந்து சேவைகள் நடைபெறுகின்ற போதிலும் அக்கராயன் பிரதேச வைத்தியசாலை, முழங்காவில் ஆதார வைத்தியசாலை என்பவற்றிற்கு வருகை தரும் நோயாளர்கள் 800 மீற்றர் தூரம் வரை நடந்து செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. இது தொடர்பாக கடந்த காலங்களில் மாவட்டச் செயலகத்திலும் பூநகரி பிரதேச செயலகத்திலும் முதியோர் சங்கங்களினால் மனுக்கள் கையளிக்கப்பட்டன.

ஆனால் பேருந்துகள் வைத்தியசாலைக்கு வருவதில்லை. இதன் காரணமாக நோயாளர்கள் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் நடவடிக்கை எடுத்து குறித்த வழித்தடங்கள் சேவையை முன்னெடுக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் (நி-6-350)

## புதிய நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் (யாழ்ப் பாணக் கிளை) நிர்வாக சபைத் தெரிவு கடந்த 30.06.2024 ஆம் திகதி திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் தற்காலிக தலைவர் சட்டத்தரணி கனக நமநாதன் தலைமையில் இடம்பெற்றது.

தலைவர். கனகநமநாதன், செயலாளர். பொ. கேசவநாதன், பொருளாளர். எஸ். யோகராஜா, உப தலைவர். டாக்டர். இ.கதிர்காமநாதன், கணக்காய்வாளர். இ.இரத்தனசிங்கம் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களான திருமதி. க.பால சுப்பிரமணியம், திருமதி. ஜே. இராஜேந்திரா.சீ.நற்குணரட்னம் ஆகியோர் தெரிவாகியுள்ளனர். (நி-6)

## கொக்குத்தொடுவாய் அகழ்வுப்பணிகள் மும்முரம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு- கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வாய்வின், நான்காம் நாள் அகழ்வாய்வுச் செயற்பாடுகள் நேற்றும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கெனவே தீர்மானிக்கப்படதற்கு அமைவாக கொக்குளாய் -முல்லைத்தீவு பிரதான வீதியின் மேல் படை அகழப்பட்டு, அகழ்வாய்வுச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இந் நிலையில் மேலும் கிரவல் படை வெளியேற்றப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அகழ்வாய்வுப் பணிகள் இடம் பெறவுள்ளன. முல்லைத்தீவ நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் பல அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் இந்த நான்காம் நாள் அகழ்வாய்வுகள் முன்னெடுக்கப்பட்டு இருந்தது. (நி-6)



யாழ்.சமூக செயற்பாட்டு மையம் மற்றும் சிறுதொழில் அபிவிருத்திப் பிரிவு பிரதேச செயலகம் கரைதுறைப்பற்று இணைந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனைக் காட்சி நேற்று முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை முன்றலில் நடைபெற்றது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3164

Search for people, places and things

**கீர்த்தனா**




**சோபனா**




**தனுஷ்கா**




**மதுமிதா**




**கோபிநாத்**




**கீர்த்தீகன்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் [illegible] facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

528





இலங்கை ஊமைக்கு மக்கள் உண்டா? உனக்குத் தெரியுமா? ஒரு தடவை இரட்டைக் குழந்தைகள் பெற்றாளாம். குழந்தைகள் என்ன ஆயின என்று ஒருவருக்கும் தெரியவில்லை. நானும் அந்த இரகசியத்தைத் தெரிந்து கொள்ள எத்தனையோ நாளாக முயன்று வருகிறேன். இதுவரை பலிக்கவில்லை."

தஞ்சாவூர்க்காரன் இங்கே எதற்காக வந்திருக்கிறான்? அவனுடைய மாமன் மகள் பூங்குழலியைத் தேடிக் கொண்டு வந்தான். அவள் இல்லை, அதனால் காத்திருக்கிறான். அவள் எங்கே போய் விட்டாள்?"

நானே சொல்ல வேண்டும் என்றிருந்தேன். மந்திரவாதியை என் புருஷன் படகில் ஏற்றிக்கொண்டு போனதற்கு மறுநாள் இன்னும் இரண்டு பேர் வந்தார்கள். அவர்களைப் பிடிப்பதற்காகப் பழுவூர் ஆட்களும் தொடர்ந்து வந்தார்கள். அவர்களில் ஒருவனை என் நாத்தி படகில் ஏற்றிக்கொண்டு இரவுக்கிரவே இலங்கைக்குப் போனாள்.

அவளுக்குப் படகுவிடத் தெரியுமா? படகு விடுவதே அவளுக்கு வேலை. படகு விடாத நேரங்களில் கோடிக்கரைக் காடுகளில் சுற்றி அலைவாள். இந்தக் காட்டில் அவளுக்குத் தெரியாத மூலைமுடுக்கு ஒன்றும் கிடையாது.

அவள் இன்னும் திரும்பி வரவில்லையென்றால், அதைக் கொண்டு நீ என்ன ஊகிக்கிறாய்?

யாரோ கடலில் முழுகிப் போய் விட்டதாக இவர்கள் அலறி அடித்துக் கொள்கிறார்களே, அது நிச்சயமல்லவென்று சொல்கிறேன். பூங்குழலி வந்த பிறகு அது நிச்சயமாகும்.

அந்தப் பெண்ணும் முழுகியிருக்கலாம் அல்லவா?

அவள் முழுகமாட்டாள். கடல் அவளுக்குத் தொட்டில். மேலும்!

மேலும், என்ன? சற்று முன்னால் கலங்கரை விளக்கின் உச்சியில் ஏறிப் பார்த்துக் கொண்டிருந்தேன். வெகு தூரத்தில் ஒரு படகு வருவதுபோல் தோன்றியது.

அப்புறம்? அப்புறம் அது கரைக்கு வரவில்லை. என்ன ஆகியிருக்கும்?"

இங்கே கடற்கரை ஓரத்தில் கூட்டமாயிருப்பதைப் பார்த்து விட்டு வேறு சதுப்பு நிலக் கால்வாயில் படகு விட்டுக் கொண்டு போயிருக்கக் கூடும்.

அது கூடச் சாத்தியமா?

"பூங்குழலிக்குச் சாத்தியமில்லாதது ஒன்றுமில்லை. தஞ்சாவூர்க்காரனும் என்னுடன் உச்சிக்கு வந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கும் அப்படியே தோன்றியதாம்.

சரி எப்படியாவது இருக்கட்டும் நாம் இப்போது குழகர் கோவிலுக்குப் போகலாம், வா! துணைக்குச் சேந்தன் அமுதனைக் கூப்பிடட்டுமா?"

வேண்டாம்! அவன் அவனுடைய மாமன் மகளைத் தேடட்டும். நாம் அதற்குக் குறுக்கே நிற்க வேண்டாம்.

இருவரும் குழகர் கோவிலை நோக்கிப் புறப்பட்டார்கள். பூங்குழலியைப் போலவே ராக்கம்மாளுக்கும் கோடிக்கரையின் புதைசேற்றுக் குழிகளைப் பற்றி நன்கு தெரிந்திருந்தது. நந்தினிக்கு ஜாக்கிரதையாக வழிகாட்டி அழைத்துக் கொண்டு போனாள்.

இருவரும் குழகர் ஆலயத்தை அடைந்தார்கள். கோவில் பட்டர் அவர்களைக் கண்டு வியப்படைந்தார்.

ராணி! இது என்ன, இந்த நேரத்தில் தனியாக வந்தீர்கள்? பரிவாரங்கள் இல்லாமல்? முன்னாலேயே எனக்குச் சொல்லியனுப்பி இருக்கக்கூடாதா? தங்களை வரவேற்க ஆயத்தமாக இருந்திருப்பேன்? என்றார். "அதற்கெல்லாம் இது தானா சமயம்? பட்டரே

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## கழியை விட்டதால் இறந்த ஆமை



ஓர் அழகிய குளம் ஒன்றில் இரண்டு அன்னப் பறவைகள் வாழ்ந்து வந்தன. ஒன்றின் பெயர் விகடம். மற்றொன்றின் பெயர் சங்கடம். அதே குளத்தில் கம்புக்கிரீவன் என்ற ஆமையும் வாழ்ந்து வந்தது.

விகடம், சங்கடம், கம்புக்கிரீவன் ஆகிய மூவரும் நல்ல நண்பர்கள். காலப்போக்கில் மழைப் பொழிவு குறைந்ததால், குளத்தின் நீரளவு குறையத் தொடங்கியது.

இதனைக் கவனித்த அன்னப் பறவைகள், இனியும் இந்தக் குளத்தை நம்பி வாழ்வது பயனற்றது. இனி நாம் வேறொரு குளத்திற்குச் செல்வோம் என்று முடிவு செய்தன. தங்களின் இந்த முடிவைத் தங்கள் நண்பனான ஆமையிடமும் கூறின.

நண்பர்களே! நீங்கள் பறந்துசென்று வேறு ஒரு குளத்தினை அடைந்து விடுவீர்கள். நான் எப்படி வேறு குளத்திற்குச் செல்வது? எனக்கும் ஏதாவது வழி சொல்லுங்களேன்! என்றது ஆமை.

அன்னப் பறவை விகடன், ஆமையிடம் நண்பா! நாங்கள் ஒரு நீண்ட கழியினைக் கொண்டு வருகிறோம். அதன் ஒரு முனைப் பகுதியை நானும் மற்றொரு முனைப் பகுதியை சங்கடனும் வாயால் கவ்விப் பிடித்துக் கொள்வோம். நீ அந்தக் கழியின் நடுப்பகுதியில் உன் வாயால் கவ்விக் கொள்ள வேண்டும். நாங்கள் இருவரும் கழியால் உன்னைத் தூக்கிக் கொண்டு பறந்து சென்று வேறு ஒரு குளத்தினை அடைவோம் என்று தங்கள் திட்டத்தினைக் கூறியது.

நண்பா! இதில் ஒரு சிக்கல் இருக்கிறது. பறந்து செல்லும் போது நீ எதுவும் பேசக்கூடாது. அவ்வாறு பேசினால் நீ கீழே விழுந்து விடுவாய். பிறகு உன்னை எங்களால் காப்பாற்ற முடியாது என்று சங்கடன் கூறியது.

நண்பர்களே! கவலை வேண்டாம். நான் பேசவே மாட்டேன் என்று உறுதியளித்தது ஆமை.

விகடன் கூறியது போலவே கழியில் ஆமையைத் தூக்கிக் கொண்டு அன்னப் பறவைகள் பறக்கத் தொடங்கின.

ஓர் ஊரின் வழியாகப் பறந்து செல்லும் போது, ஊர் மக்கள் இந்த அதிசயமான காட்சியைப் பார்த்து வியந்தனர். அவர்கள் கூவி ஒலியெழுப்பினர். எங்கிருந்து இந்த சப்தம் வருகின்றது? என்று நினைத்த ஆமை, அன்னப் பறவைகளிடம் கேட்க நினைத்துத் தன் வாயைத் திறந்தது. உடனே, ஆமையின் பிடி கழியிலிருந்து நழுவியது. ஆமை கீழே விழுந்து இறந்தது.

நீதி :

நமக்கு நன்மை செய்கின்றவர்களின் பேச்சை நாம் மதிக்க வேண்டும் என்று பெண் பறவை, ஆண் பறவைக்குக் கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையைச் செய்யத் துணிவுடன் இரு. அதுவே வீரத்தின் சிகரம்.
– சிம்மன்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஊழலுக்கு எதிராகப் போராட மக்கள் முன்வர வேண்டும்

சாவகச்சேரி வைத்தியசாலை தொடர்பிலும் வட மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் உள்ள குறைபாடுகள் தொடர்பிலும் மருத்துவர் அர்ச்சுனா பொதுவெளியில் முன்வைத்த கருத்துக்கள் மிகப்பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.

தவிர, மருத்துவர் அர்ச்சுனாவுக்காக தென்மராட்சி மக்கள் திரண்டெழுந்த விவகாரம் அரசியல் மட்டத்திலும் பேசுபொருளாகியுள்ளதைக் காண முடிகிறது.

இதனிடையே மருத்துவர் அர்ச்சுனா கொழும்புக்கு அழைக்கப்பட்டதன் பேரில் அவர் அங்கு சென்றுள்ளார்.

அவரை சாவகச்சேரி வைத்தியசாலையில் இருந்து வெளியேற்றுவதன் மூலம் மக்கள் போராட்டம் முற்றுப் பெறும் என்பது வட மாகாண சுகாதாரத் தரப்பின் நிலைப்பாடு.

ஆனால் நிலைமை இதனோடு முடிந்து போகமாட்டாது. மாறாக, ஊழல்களுக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி கொள்வர்.

இந்தக் கிளர்ச்சி ஏற்படுவதற்கு முன்னதாக ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இங்கு ஊழல் குற்றச்சாட்டுக்கு எதிரான விசாரணை என்பது தனித்து சுகாதாரத் துறையை மட்டும் குறித்துரைப்பதாகக் கருதிவிடாதீர்கள்.

மாறாக, தமிழர் பிரதேசத்திலுள்ள அனைத்து திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் என எங்கெல்லாம் ஊழல் மோசடிகள் நடந்துள்ளனவோ – அதிகாரத் துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதோ – ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் வஞ்சிக்கப்பட்டுள்ளார்களோ அவை தொடர்பில் இலஞ்ச ஆணைக்குழு தனது விசாரணைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

இதைச் செய்ய அரச உயர்மட்டம் தாமதிக்குமாயின், ஊழலுக்கு எதிராகப் போராட எம் அனைத்துத் தமிழ் மக்களும் களத்தில் இறங்க வேண்டும்.

ஆம், நொந்து கெட்டுப் போயுள்ள எங்கள் தமிழ் இனத்தை தூக்கி நிறுத்த வேண்டிய தமிழ் அரச உயர் அதிகாரிகள் சிலர், ஊழல் மோசடியில் ஈடுபடுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

உண்மை. தமிழினம் வாழ்வதற்காக எத்தனை எத்தனை ஆயிரம் தமிழ் இளைஞர் யுவதிகள் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்துள்ளனர். இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் போரில் கொல்லப்பட்டுள்ளனர்.

இதனையும் கடந்து இன்னமும் தமிழ் மக்களின் எதிர்காலத்தைப் பாழாக்குகின்ற கொடுமைகளை சிங்களப் பேரினவாதம் செய்து வருகிறது.

இந்தநிலையில், இந்த மண்ணில் இருந்து கொண்டு தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்வதை ஒருபோதும் மன்னிக்க முடியாது.

ஆகையால் ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்தப்பட வேண்டும். இதனைச் செய்யத் தவறும் பட்சத்தில் எம் மக்கள் திரண்டெழுந்து நீதியை நிலைநாட்டுவர்.

# பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள கடன் மறுசீரமைப்பு அவசியம்

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள கடன் மறுசீரமைப்பு அவசியம் என அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் சில வாரங்களில் கடன் மறுசீரமைப்பு செயல்முறை குறித்து, சர்வதேச கடன் பத்திரதாரர்களுடனான பேச்சுவார்த்தைகளை இலங்கை நிறைவு செய்யும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும்,இலங்கை பல தசாப்தங்களாக எதிர்நோக்கும் அதன் மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இது வொரு முக்கிய படியாகும் என அவர் வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, இந்த மாத இறுதிக்குள் அதிகாரபூர்வமாக கடன் பத்திரதாரர்களுடனான மறுசீரமைப்பு செயல்முறையை இலங்கை நிறைவு செய்யும்.

அதன்பின்னர், பேச்சுவார்த்தையில் எட்டப்படும் தீர்மானத்திற்கு அமைய, அவர்களுக்கான கொடுப்பனவுகளை செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த வாரம் 12.5 பில்லியன் அமெரிக்க டொலர் இருதரப்பு சர்வதேச கடன் பத்திரங்களை மறுசீரமைப்பதற்காக இலங்கை, அதன் கடன் வழங்குநர்களுடன் தற்காலிக ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டது.

எனினும், தற்போது மீதமுள்ள தனியார் கடன் வழங்குநர்களுடனும் உடன்பாட்டை எட்ட வேண்டியது அவசியமாகும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

# தம்மிக்க பெரேராவின் வீட்டை முற்றுகையிட்டு பாரிய போராட்டம்

## உருவ பொம்மையும் எரிப்பு

பெருந்தோட்ட நிறுவனமொன்றின் தலைவரும், தொழிலதிபருமான தம்மிக்க பெரேராவின் வீட்டிற்கு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்க கோரியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இலங்கை தோட்ட துரைமார் சங்கம் கட்டிடத்திற்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதுடன், இதில் ஆயிரக்கணக்கான பெருந்தோட்ட தொழிலாளர்கள் பங்கேற்றிருந்தனர்.

இதன் போது உருவ பொம்மையை எரித்து போராட்டக்காரர்கள் தமது எதிர்ப்பை தெரிவித்திருந்தனர்.இதனால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டிருந்ததுடன், பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1700 ரூபாவாக அதிகரிக்கும் வகையில் தொழில் அமைச்சரினால் அண்மையில் வர்த்தமானியொன்று வெளியிடப்பட்டது. எவ்வாறாயினும், இந்த வர்த்தமானிஅறிவித்தலுக்கு தடை விதிக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் முதலாளிமார் சம்மேளனம் வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தது.

இந்நிலையில், குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்கால தடை விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# தொலைத்தொடர்புச் சட்டம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்

இலங்கைத் தொலைத்தொடர்பு (திருத்தச்) சட்ட மூலம் திருத்தங்களுடன் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (09) இடம் பெற்ற சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு விவாதம் முடிவடைந்ததும் வாக்கெடுப்பு இன்றி நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து குழு நிலையில் சட்டமூலத்திற்கான திருத்தங்கள் முன்வைக்கப்பட்டு மூன்றாவது மதிப்பீடு வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

1991ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க இலங்கைத் தொலைத்தொடர்புச் சட்டத்தைத் திருத்துவதற்காக கடந்த மே 04 ஆம் திகதி தொழில்நுட்ப அமைச்சினால் இந்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், இது 28 வருடங்களின் பின்னர் திருத்தப்பட்டுள்ளது.

இதுவரை உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலைகளைப் பின்பற்றும் வகையில், போட்டி நிறைந்த சந்தையில் நுகர்வோருக்கு நியாயமான ஒழுங்குமுறைப்படுத்தலை மேற்கொள்வதற்கான வாய்ப்பை இந்தத் திருத்தச் சட்டமூலம் வழங்குகின்றது. (ம-7)

# சம்பள உயர்வை உடனடியாக வழங்குக

## மின்சார சபை ஊழியர்கள் போராட்டம்

இலங்கை மின்சார சபையின் கல்முனை தலைமை அலுவலகத்திற்கு முன்பாக மின்சாரசபை ஊழியர்கள் போராட்டம் ஒன்றினை நேற்று முன்னெடுத்துள்ளனர்.

இப்போராட்டத்தின் போது 2024ம் ஆண்டிற்கான சம்பள உயர்வை உடனடியாக வழங்கு, சம்பள முரண்பாட்டு தீர்வை உடனடியாக வழங்கு, வேலை நீக்கம் செய்த 62 தொழிலாளர்களை உடனடியாக சேவையில் இணைத்துக் கொள், என பல வேறு வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு விநியோகித்து அமைதி வழிப்போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மேலும், மின்சார தொழிலாளர் கோரிக்கையை நிறைவேற்ற முடியவில்லையாயின் ஆட்சியாளர்களை விரட்டியடிப்போம் என ஊடகங்களிடம் குறிப்பிட்டனர்.

இதன் போது சுமார் 50க்கும் அதிகமான உத்தியோகத்தர்கள் இப்போராட்டத்தில் பங்கேற்றிருந்ததுடன் இலங்கை மின்சாரத் தொழிற்சங்கம் இப்போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# நீர்கொழும்பில் விபத்து பெண் உயிரிழப்பு

பமுனுகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நீர்கொழும்பு - உஸ்வெட்டகெய்யாவ வீதியில் உஸ்வெட்டகெய்யாவ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

போப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார்.

நீர்கொழும்பிலிருந்து உஸ்வெட்டகெய்யாவ நோக்கிப் பயணித்த வான் ஒன்று வீதியில் பயணித்த பெண் பாதசாரி ஒருவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது படுகாயமடைந்த பெண் பாதசாரி ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது சடலம் ராகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது, வான் சாரதி தப்பிச் சென்று பின்னர் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் வானுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பமுனுகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பங்களாதேஷ் உருவான கதையும் அந் நாட்டின் தேர்தல்களும் - ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

14

அரசாங்க விசாரணை அறிக்கையின்படி ராமு சம்பவத்தில் பிரதான சந்தேக நபர் அவராவர்.

பர்மா, இந்தியா, இலங்கை, மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் பௌத்த துறவிகள் மற்றும் இந்துக் குழுக்களின் குழுக்கள் பங்களாதேஷில் பௌத்த எதிர்ப்பு வன்முறைக்கு விடையிறுக்கும் வகையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன. இலங்கையின் கொழும்பில், பங்களாதேஷ் தூதரகத்திற்கு வெளியே சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் மற்றும் தாக்குதல்களைக் கண்டித்து ஒரு மனு வழங்கப்பட்டது.

இலங்கையின் கொழும்பில் உள்ள பங்களாதேஷ் தூதரகத்தின் சில ஜன்னல்கள், பொலிசார் வந்து போராட்டத்தை கலைப்பதற்கு முன்னர் சேதப்படுத்தப்பட்டன.

ஒக்டோபர் 6 ஆம் திகதி, பங்களாதேஷ் பிரதம மந்திரி ஷேக் ஹசீனா, பௌத்த எதிர்ப்பு வன்முறையைக் கண்டித்து, இது திட்டமிட்டு நடத்தப்பட்டது என்று தனது நம்பிக்கையைத் தெரிவித்தார், மேலும் இந்த பிரச்சினையில் நிதானத்தை வலியுறுத்தினார். ஒக்டோபர் 8 ஆம் திகதி பிரதமர் அவர்களே பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று, சம்பவத்தைக் கண்டித்து, உரிய நீதி வழங்கப்படுமென உறுதியளித்தார்.

பிரதம மந்திரி ஷேக் ஹசீனா, 200 மில்லியன் பங்களாதேஷ் டாக்கா பணச் செலவில், "சேதமடைந்த புத்த கோவில்களை புனரமைத்தல் மற்றும் மறுசீரமைத்தல்" என்ற திட்டத்தின் கீழ் இந்த கோவில்களை மீண்டும் கட்டியெழுப்புமாறு பங்களாதேஷ் இராணுவத்திற்கு உத்தரவிட்டார். பங்களாதேஷ் இராணுவம் இந்த புத்த கோவில்களையும் விகாரைகளையும் 19 தனித்தனி இடங்களில் புத்த சமூகத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற கட்டடக் கலைஞர்களின் பாரம்பரிய வடிவமைப்புகளை இணைத்து புனரமைத்தது.

வங்காளதேசத்தின் ஜனாதிபதி அப்துல் ஹமீட் 10 ஜனவரி 2014 அன்று காக்ஸ் பஜாரின் ராமு உபாசிலாவில் மீண்டும் கட்டப்பட்ட பல புத்த கோவில்கள் மற்றும் மையங்களை பார்வையிட்டார்.

இந்த விஜயத்தின் போது, உள்ளூர் பௌத்த சமூகத்தினரின் நலன்களை கேட்டறிந்த ஜனாதிபதி, பாதிக்கப்பட்ட சமூகத்தினருக்கு காசோலைகளை வழங்கினார்.

### வங்காளதேசத்தில் இந்துகளின் மீதான வன்முறை, 2013

2013 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் நாளன்று வங்காளாதேச ஜமாத்-இ-இஸ்லாமியின் துணைத்தலைவர் தெல்வார் ஹோசைன் சையதுக்கு சர்வதேச நீதிமன்றம் மரண தண்டனை வழங்கியது. 1971 வங்காளதேசப் போரின்போது அவர் இழைத்த குற்றங்களுக்காக அவருக்குத் தண்டனை வழங்கப்பட்டது. அதன் விளைவாக வங்காளதேசத்தில் வாழும் சிறுபான்மையினரான இந்துகள் மீது ஜமாத்-இ-இஸ்லாமியின் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தினர். இந்துகளின் சொத்துகள் சூறையாடப்பட்டன, வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன மற்றும் இந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டு தீவைத்துக் கொளுத்தப்பட்டன.

தீர்ப்புக்கு பிறகு ஜமாத்தே இஸ்லாமி கட்சியினர் தீர்ப்புக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர். காவல் துறை, தீயணைப்பு படையினர் உள்ளிட்ட நிறுவனங்களை தாக்கி, போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தி, வாகனங்களுக்கு தீ வைத்தனர். அவர்கள் குறிப்பாக இந்து சிறுபான்மையினரை தாக்கினர், அவர்களது வீடுகள் மற்றும் வணிகங்களை அழித்தார்கள், அவர்களின் கோவில்களை சேதப்படுத்தினர் மற்றும் தீ வைத்து எரித்தனர். சமூகத் தலைவர்களின் கூற்றுப்படி, 20 மாவட்டங்களில் 50 இற்கும் மேற்பட்ட இந்துக் கோவில்கள் மற்றும் 1,500 இந்து வீடுகள் அழிக்கப்பட்டன.

பங்களாதேஷில் சிறுபான்மையினருக்கு எதிரான அட்டூழியங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து வங்காளாதேச இந்து புத்த கிறிஸ்தவ ஒற்றுமை கவுன்சில் மற்றும் பங்களாதேஷ் பூஜா உத்ஜபன பரிஷத் தலைவர்கள் மார்ச் 2 அன்று டாக்கா மற்றும் சிட்டகாங்கில் உள்ள தேசிய பத்திரிகையாளர் மன்றத்தில் மனித சங்கிலி நடத்தினர்.

கூட்டத்தில், இந்து தலைவர்கள் சமீபத்திய தாக்குதல் சம்பந்தமாக ஆழ்ந்த கவலைகளை வெளிப்படுத்தினர் மற்றும் 1971 இல் செய்தது போல் வங்காளதேசத்திலிருந்து சிறுபான்மையினரை அழிப்பதில் ஜமாத்-இ-இஸ்லாமி மீண்டும் ஈடுபட்டுள்ளது என்று கூறினார்.

நோகாலி மாவட்டத்தில் உள்ள இந்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், தாக்குதலில் அழிக்கப்பட்ட இந்துக்களின் கோவில்கள் மற்றும் வீடுகளை சீரமைக்கவும் மார்ச் 3 அன்று வங்கதேச உயர் நீதிமன்றம் அரசுக்கு உத்தரவிட்டது. தாக்குதல்களில் ஈடுபட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க நோகாலி மாவட்ட காவல்துறை, மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல்துறை தலைமை கண்காணிப்பாளர் ஆகியோருக்கு தானாக முன்னோடியாக நோட்டீஸ் அனுப்பியது.

எதிர்க்கட்சியான பிஎன்பியின் தலைவரான கலிதா ஜியாவும் இந்துக்கள் மீதான வகுப்புவாத தாக்குதல் குறித்து கவலை தெரிவித்தார். மார்ச் 6 அன்று, வன்முறைக்கு எதிராக நாடு முழுவதும் இந்துக்கள் போராட்டம் நடத்தினர்.

இந்தியாவில், வங்காளதேசத்தில் உள்ள இந்து சிறுபான்மையினரைப் பாதுகாக்கத் தவறியதைக் கண்டித்து, கைரிக் பாரத் அமைப்பினர் ஷேக் ஹசீனாவின் உருவப் பொம்மையை சில்சாரில் எரித்தனர்.

பாரதீய ஜனதா கட்சி, மேற்கு வங்கப் பிரிவு, இஸ்லாமிய தீவிரவாதத்தில் இருந்து இந்துக்களை பாதுகாக்க பங்களாதேஷ் அரசாங்கத்தின் மீது அழுத்தம் கொடுக்க மத்திய அரசை கோரியது. இந்திய பாராளுமன்றத்தின் மேலவையான ராஜ்ய சபாவில், ஜமாத்-இ-இஸ்லாமியின் "இந்துக்கள் மீதான அட்டூழியங்களை" மதிப்பிடுவதற்கு அனைத்துக் கட்சிக் குழுவை வங்கதேசத்திற்கு அனுப்புமாறு பிரதான எதிர்க்கட்சியான பாரதிய ஜனதா கட்சி கோரியது.

பங்களாதேஷில் இந்துக்கள் மீது தொடர்ந்து நடத்தப்படும் தாக்குதல்கள் குறித்து தீவிர கவலையை தெரிவித்துள்ள தெற்கு அசாம் பெங்காலி இந்து சங்கம், வங்கதேசத்தில் இந்துக்கள் மீதான அட்டூழியங்களை தடுக்க இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தலையிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தது.

டாக்காவில் உள்ள பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் திரு. ராபர்ட் கிப்சன், மார்ச் 3 ஞாயிற்றுக்கிழமை டாக்காவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், மதத் தலங்கள் மீதான தாக்குதல் மற்றும் தாக்குதல்கள் குறித்து தனது ஆழ்ந்த கவலையையும் வருத்தத்தையும் தெரிவித்தார்.

மார்ச் 4 அன்று, பங்களாதேஷில் உள்ள இந்து கோவில்கள் மற்றும் வீடுகள் மீதான தாக்குதல்கள் குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை கவலை தெரிவித்தது. வங்காளாதேசத்துக்கான அமெரிக்க தூதர் டான் மொசெனா, பெங்காலி இந்து சமூகத்தின் மீது ஜமாத்தின் தாக்குதல் குறித்து கவலை தெரிவித்தார்.

நாட்டில் உள்ள சிறுபான்மை இந்துக்களுக்கு சிறந்த பாதுகாப்பை வழங்குமாறு வங்கதேச அரசை சர்வதேச மன்னிப்புச் சபை கோரியது. "பங்களாதேஷ்: இந்து சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைத் தாக்குதல்களின் அலை" என்ற தலைப்பில் மார்ச் 6 ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிக்கையில், இஸ்லாமியக் கட்சியின் ஆதரவாளர்களின் தாக்குதலில் 40இற்கும் மேற்பட்ட இந்துக் கோவில்கள் இடிக்கப்பட்டதாக மன்னிப்புச் சபை கூறியது.

கடந்த ஒரு வாரத்தில் இந்து சமூகத்தைச் சேர்ந்த கடைகள் மற்றும் வீடுகள் எரிக்கப்பட்டதால் பல நூறு பேர் வீடற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். இந்த அறிக்கை வங்காளதேசத்தின் போர்க்குற்ற விசாரணையை இந்துக்களுக்கு எதிரான வன்முறைக்கு "சூழல்" என்று வழங்கியது.

பங்களாதேஷில் சிறுபான்மையினர் மற்றும் அவர்களின் வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல்களுக்கு பிரிட்டன் பாராளுமன்றத்தில் உள்ள மேல் சபையில் (House of Lords) பரோனஸ் சயீதா வார்சி கண்டனம் தெரிவித்தார். சிறுபான்மை இந்துக்களுக்குச் சொந்தமான 24 வழிபாட்டுத் தலங்கள், 112 வீடுகள் மற்றும் சுமார் ஒரு டஜன் வணிக நிறுவனங்கள் தாக்குதலுக்கு உள்ளானதாக அவர் கூறினார். லார்ட் அவெபரியின் கூற்றுப்படி, சமீபத்திய தாக்குதல்கள் 2001 இந்துக்கள் மீதான தாக்குதலின் மறுநிகழ்வு ஆகும் என்றார்.

இந்துமத விரோத அட்டூழியங்கள் பற்றிய உள்ளூர் செய்திகள் இருந்தாலும், சர்வதேச ஊடகங்களில் இருந்து எந்த வெளிப்பாடும் இருக்கவில்லை, ஆனால் தாக்குதல்களின் படங்கள் சமூக ஊடகங்களில் தொடர்ந்து பரப்பப்பட்டன.

### 2014ஆம் ஆண்டுத் தேர்தலுக்கு முன் நடந்தவை

2013 ஆம் ஆண்டு பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி மற்றும் மூன்று முறை முன்னாள் பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவருமான கலிதா ஜியா தலைமையிலான 18 எதிர்க்கட்சிகளைக் கொண்ட அதன் கூட்டணி 85 நாட்களுக்கும் மேலாக நாடு தழுவிய பொது வேலை நிறுத்தங்கள் மற்றும் தடைகளுக்கு அழைப்பு விடுத்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல்வாயில்...

திகதி மைத்துனரின் மரணச் சடங்குக்கு சென்று மோட்டார் சைக்கிள் ஒன்றில் பின் இருக்கையில் இருந்து காடாத்துக்கு சென்று விட்டு திரும்பி வரும்போது இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் பிறிதொரு மோட்டார் சைக்கிளுடன் உரசுண்டதில் பின் இருக்கையில் இருந்து அவர் தூக்கி வீசப்பட்டு படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச் சைக்காக யாழ்போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு மீண்டும் பின்னர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் பருத்துத்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணை மேற்கொண்டார். (ம-7,60)



















## ஜூலை மாத...

17ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் 17ஆம் திகதிக்கும் இடையில் தேர்தலை நடத்தப்படலாம்.

16 முதல் 21 நாட்களிற்குள் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அதன்பின்னர் தேர்தல் வாக்களிப்பு நான்கு வாரங்களிற்கு பின்னரும் ஆறு வாரங்களிற்கு முன்னதாகவும் இடம் பெறும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் தேர்தல்களிற்கு தயாரா வதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு பொலிஸ்மா அதிபரை சந்திக்கவுள்ள தாகவும் அரசாங்க அச்சகத்தின் அதிகாரிகளையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## ஹயஸ் வாகன...

வாடகைக்கு பெற்றதுடன், குறித்த வாகனத்தில் கோவில்குளம் பகுதியில் இருந்து இருமாடுகளை கடத்தியுள்ளனர்.

மாடுகளுடன் சென்ற வாகனம் விபத்துக்குள்ளானதால் குறித்த வாகனத்தை வாகன திருத்தும் இடம் ஒன்றில் நிறுத்தி விட்டு இரு மாடுகளையும் இறைச்சிக்காக விற்றுள்ளனர்.

மாடு கடத்தப்பட்டமை தொடர்பில் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து, பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, மாடுகளை கடத்திய பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டதுடன், விபத்துக்குள்ளான வாகனமும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின் சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7,250)

## முல்லையில்...

என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் கடந்த வியாழக்கிழமை வேலைக்காக உயிலங்குளம் வீதி ஊடாக தென்னியங்குளம் நோக்கி வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்தபோது உயிலங்குளம் பகுதியிலுள்ள வயல்வெளிக்கு அருகாமையில் வாகனத்தின் சில் ஒன்றில் காற்று போனமையால் வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் படுகாயமடைந்த நிலையில் மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்த நிலையில், அவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## பொறுப்பற்று...

திற்கும் காரணம் என்று அமைச்சரவையில் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, விசாரணைக் குழு அமைக்கப்பட்டு, சீர்கேடுகளுக்கு காரணமானவர்கள் உடடியாகத் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கடற்றொழில் அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட குறித்த விடயத்தினை அமைச்சரவை ஏற்றுக் கொண்டுள்ளது.

குறித்த கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்ததாவது,

"சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு வைத்திய அத்தியட்சகராக கடந்த ஜூன் மாதம் நியமிக்கப்பட்ட வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா, அங்கு நிலவி வந்த நிர்வாக சீர்கேடுகளையும், குறைபாடுகளையும் அடையாளம் கண்டு அவற்றை சீர்செய்வதற்கு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

அதனடிப்படையில், பெண் நோயியல் பிரிவு, சந்திர சிகிச்சை பிரிவு, ஐ.சி.யு. பிரிவு ஆகியவற்றை செயற்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட 3 மாடிக் கட்டிடம் கடந்த 14 வருடங்களாக பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன், நன்கொடையாளரினால் வழங்கப்பட்ட 20 மில்லியன் ரூபாய் பெறுமதியான சத்திரசிகிச்சை உபகரணங்களும் பயன்படுத்தப்படாமல்இருந்த நிலையில், அவற்றை செயற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட வைத்திய அத்தியட்சகர், முதற்கட்டமாக ஐ.சி.யு. மற்றும்மகப்பேற்று பிரிவு ஆகியவற்றை செயற்படுத்தியுள்ளார்.

மேலும், சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டிய நோயாளர்கள் அனைவரும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு வந்த நிலையில் சத்திரசிகிச்சை பிரிவை இயக்குவதற்கான முயற்சிகளும்மேற்கொள்ளப்பட்டு வந்தன.

அதேபோன்று, குறித்த வைத்தியசாலையில் உயிரிழப்பவர்களின் உடல்கள், உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு வந்த நிலையில், அதனை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மேற்கொண்டு, பொதுமக்களுக்கு ஏற்பட்டு வந்த தேவையற்ற அசௌகரியங்களை தடுப்பதற்கும் வைத்திய அத்தியட்சகர் அர்ச்சுனாவினால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், மருந்துப் பொருட்கள் உரிய களஞ்சியப்படுத்தல் ஏற்பாடுகள் இன்றி, தரையில் போடப்பட்டிருந்ததுடன், குறித்த வைத்தியசாலையில் 22 வைத்தியர்கள் கடமையாற்றி வந்ததுடன், அவர்களுள் பெரும்பாலானவர்கள், மாதத்தில் 10 நாட்கள் மாத்திரமே வைத்தியசாலையில் கடமையாற்றியுள்ளனர்.

இவ்வாறான பல்வேறு சீர்கேடுகள் மற்றும் குறைபாடுகளை தீர்ப்பதற்கு வைத்திய அத்தியட்சகர் முன்னெடுத்த முயற்சிகளை விரும்பாத சக்திகள், அங்கு தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளன.

இவை அனைத்தையும் அறிந்து கொண்ட பொதுமக்கள் பாரிய போராட்டம் ஒன்றினையும் முன்னெடுத்தனர்.

எனவே, குறித்த விவகாரம் தொடர்பில் உயர்மட்ட குழு அமைக்கப்பட்டு நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பொறுப்பற்ற முறையில் செயற்பட்ட அனைவரும் சட்டத்தின்மூலம் தண்டிக்கப்பட வேண்டும்" என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையில் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2025 பாதீடு தயாரிக்கும் பணி விரைவில் ஆரம்பம்

2025ஆம் ஆண்டுக்கான பாதீட்டு யோசனையை தயாரிக்கும் நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக அரச நிறுவனங்களின் பாதீட்டு அறிக்கைகளை கோர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளரொருவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய மதிப்பீட்டு அறிக்கைகளை கோரும் நடவடிக்கைகளும் அதே சந்தர்ப்பத்தில் முன்னெடுக்கப்படுமென நிதியமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ம-7)

# பாதாள உலகக் குழுக்கள் முற்றாக ஒழிக்கப்படும்

## அமைச்சர் டிரான் அலஸ்

பாதாள உலகக் குழு மற்றும் போதைப் பொருள் கடத்தல் அடுத்த வருடம் டிசம்பர் மாதத்திற்குள் இலங்கையில் இருந்து ஒழிக்கப்படும் என பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் வெல்லவாய பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பொது பாதுகாப்பு அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறான அழுத்தங்கள் வந்தாலும் நீதி நடவடிக்கையை நிறுத்தப் போவதில்லை என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் தலைமையில் இந்தப் பணியை முன்னெடுப்பதாகவும் கூறியுள்ளார். (ம-7)


## பணியாளர் தேவை

யாழ். கோப்பாய் இருபாலைச் சந்தியில் ஆரம்பிக்கவிருக்கும் Cafe ஒன்றிற்கு ஆண், பெண் பணியாளர்கள் தேவை.
வயது எல்லை 18- 30, கோப்பாய், இருபாலை பகுதிகளை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது. (1433)

கருடா Cafe
பருத்தித்துறை வீதி, இருபாலைச் சந்தி
077 050 0008

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-764)
076 825 7716 (ஆகாஸ்)

JV Language Centre
Station Road, Chunnakam
Deutsch A1, A2 and B1
சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்
Work Visa, Student Visa
தொடர்பு கொள்ள: 0777 291 307 or 0773 743 404 (1414)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்





திரு. பஞ்சாட்சரம் கணேசன்
(B.Com, PGDE, PGD.in Pub. Admin, MEd, PGDEM)
பிரதிக்கல்விப் பணிப்பாளர் (கல்வி நிர்வாகம்)
வலயக் கல்வி அலுவலகம் முல்லைத்தீவு
ஆசிரியராக, அதிபராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி 08.07.2024 தொடக்கம் முல்லைத்தீவு கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக (கல்வி நிர்வாகம்) கடமையைப் பொறுப்பேற்றதையிட்டு அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் தம் சேவையில் மேலும் சிறப்பாக செயற்பட வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
நண்பர்கள், கு.விமலன், கு.திலீபன், ப.சுதானந்தராஜா (1432)


# மரண அறிவித்தல்

## வேலாயுதம் பத்மநாதன் (கிச்சி)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1931-03-26 | 2024-07-09 |

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கை வதிவிடமாகக் கொண்ட வேலாயுதம் பத்மநாதன் அவர்கள் நேற்று (09.07.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - கனகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பையா - சோதிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற புஸ்பலீலாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, நடராசா, பாலசிங்கம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான தில்லைநடராஜன், புஸ்பநாதன் மற்றும் மாலதி (ஜேர்மனி), காலஞ்சென்ற வசந்தி மற்றும் தவபாலன் (நோர்வே), தர்மபாலன் (லண்டன்), தயாளன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சரோஜினிதேவி, சித்திரா (ஜேர்மனி), குணரட்ணம் (ஜேர்மனி), புஸ்பலதா (நோர்வே), குமுதினி (லண்டன்), ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் சுனித்திரா (பிரான்ஸ்), சுபாஜினி (நெதர்லாந்து), சுதர்சினி (கனடா), உஷா (ஜேர்மனி), ஜீவிதா (ஜேர்மனி), அமரர் ஜீவானந்த் (ஜேர்மனி), அமரர் பார்பரா (ஜேர்மனி), தாரணி (நோர்வே), தரண்யா (நோர்வே), சுவன்யா (நோர்வே), பிரவீன் (லண்டன்), நவீன் (லண்டன்), பிரணவி (லண்டன்), சாருஜன் (மொரட்டுவ பல்கலைக்கழகம்), தாருஜன் (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு பேரனும் அஞ்சனா (பிரான்ஸ்), அப்சரா (பிரான்ஸ்), கஜாணன், றோசிகா (கொலன்ட்), சஸ்வின் (கொலன்ட்), சுவஸ்திகா (கனடா), சர்வின் (கனடா) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2024) புதன்கிழமை காலை 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல் : குடும்பத்தினர்
077 990 7163 (தயாளன்) (1434)


## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள் (149)
தொடர்புகளுக்கு:
074 17 37 684

## கடை வாடகைக்கு

திருநெல்வேலிப் பகுதியில் சிறிய கடை ஒன்று வாடகைக்கு உண்டு. (1430)
076 294 3552

## காணி விற்பனைக்கு உண்டு

கோப்பாய் வைத்தியசாலைக்கு அருகாமையில் காணி விற்பனைக்கு உண்டு. (1416)
077 141 7032

அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள் குறைந்த விலையில்
- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு | மட்டக்களப்பு | திருகோணமலை | கிளிநொச்சி | புதுக்குடியிருப்பு | கொடிகாமம் | சாவகச்சேரி | புத்தூர் | யாழ்ப்பாணம் | நாச்சிமார் கோவிலடி | பண்டத்தரிப்பு | சுன்னாகம் | மானிப்பாய் | சங்கானை | கோப்பாய் | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை
V2 TRAVELS 0768226240 0768226241 (C-765)

## வேலைவாய்ப்பு

நெல்லியடியில் இயங்கும் ஐஸ் கிறீம் கடைக்கு வேலையாள் தேவை. ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (C-767)
077 146 5543

## வாடகைக்கு உண்டு

யாழ் நகர் பகுதியில் அமைந்த வீடு ஒன்றில் அறைகள் வாடகைக்கு விடப்படும். (1427)
குறிப்பு: மருத்துவ பீட மாணவர்கள்/ பல்கலைக்கழக மாணவர்கள் விரும்பத்தக்கது.
074 208 8081

V2 VISA SERVICES கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-765)

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)
CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-765)
College Of International Migration Skills
0777 068 777 / 0777 7719 322


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தா[illegible] இல.190 [illegible] யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org